



A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM

மலர் 24 இதழ் 12

FEBRUARY 2020











# எதற்கு ஒற்றுமை?

இலட்சியத்தில் ஒற்றுமை வேண்டும்.

அதற்கான போராட்டத்தில் ஒற்றுமை வேண்டும்.

ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்.

காணாமல் போகடிக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில், நிலமீட்புப் போரில் ஒன்றிணைய வேண்டும்.

இது நடக்கிறதா? இல்லவேயில்லை.

ஆயிரத்தெட்டுக் கட்சிகள். சில கட்சிகள் இணைந்து கூட்டமைப்பு வேற.

இன்னும் சில கட்சிகள், புதிய 'கூட்டுக்காக' உருவாகின்றன.

யாருடனும் சேர மாட்டோமென தனிக்கட்சி வேற.

இவர்கள் யாருமே மக்களுக்காக ஒன்றிணைவதில்லை.

மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதில்லை.

காணாமல் போன 20,000 பேரும், 'இறந்துவிட்டார்கள்' என்று கோத்தபாய கூறியும் இந்த நாடாளுமன்ற அரசியல்வாதிகள் ஒன்றிணையவில்லை.

ஏன் இணையவில்லை என்ற கேள்வியை மக்களும் கேட்பதில்லை.

தேர்தல் நேரத்தில் கூட்டுச்சேரும் இந்தத் தமிழ் கட்சிகள், காணாமல் போன அந்த மக்களுக்காக – ஏன் போராடவில்லை?.

கடந்த 5 வருடங்களாக ரணிலோடு பேச நேரமிருந்தது.

இப்போது மகிந்த–கோத்தாவை சந்திக்க நேரமிருக்கிறது.

ஏனென்று கேட்டால், 'தீர்வு வேண்டுமென்றால் பேசத்தான் வேண்டும்' என்கிற பதில் வரும்.

இவர்கள் தீர்வு விடயத்திலும் ஒன்றுபடவில்லை.

மக்கள் பிரச்சினைகளிலும் ஒன்றுபடவில்லை.

தங்கள் கட்சிக்குள்ளும் ஒன்றுபடவில்லை.

பிறகெதற்கு ஒற்றுமை.....ஒற்றுமை...... என்று கதறுகிறார்கள். ஆம் தேர்தல் வருகிறது.

எம்பியாக வேண்டும்.

தொடர்ந்து எம்பியாக இருக்க வேண்டும்.

அதுவும் சாகும்வரை எம்பியாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து போட்டியிடுவார்கள்.

அடுத்தகட்ட தலைவர்கள், மாகாணசபைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் பதவி வகிக்கலாம்.

இதுதான் யதார்த்தநிலை.

கட்சிகளின் பெயர்களில் தமிழீழம் என்று இருக்கும். ஆனால் கேட்பது ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி.

இந்த முரண்பட்ட நிலை ஏனென்று கேட்டால், தமிழீழம் கேட்பது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும்

பிடிக்காது என்பார்கள்.

'விக்கினேசுவரனும் கஜேந்திரகுமாரும் வாக்குகளை பிரித்துவிட்டால் மற்றவர்கள் வந்து விடுவார்கள்'..ஆகவே எல்லோரும் ஒன்றிணைந்து லெக்சன் கேட்க வேண்டும் என்கிறார்கள்.

இப்ப தெரிகிறதா, இவர்கள் ஒற்றுமைக் குரலின் சூத்திரம்!.

இதனை மாற்ற வேண்டும். அதுதான் நேர்மையான–உண்மையான மாற்று அரசியல்!

















World Tour Store
Hello 2020
Let your journey begin with us
கொழும்பிற்கான
சிறந்த பிரயாண
ஏற்பாடு செய்ய
எம்மை நாடுங்கள்
COLOMBO fr £496
Exclusive Flights and Holiday Deals
CHENNAI FR £453
HYDERABAD FR £473
KOCHI FR £449
MUMBAI FR £383
DELHI FR £395
GOA FR £526
DUBAI FR £283
ABU DHABI FR £281
TORONTO FR £379
BANGKOK FR £432
& Many More...
HURRY! CALL NOW 020 3970 4141
BEST DEALS CHEAP FLIGHTS BEST DEALS
Wembley
Unit 3 A, Plaza Parade, 29-33
Ealing Road, Wembley, HA0 4YA.
Lewisham
111 b, Loampit Vale,
Lewisham SE13 7TG
3550 ATOL PROTECTED
Limited availability. *Above fares & offers are subject to availability. T&C's Apply.

பனங்காட்டான்

# சிங்கள அரசியல் அரங்கை

# திணறடிக்க வைக்கும் திரைப் பிரபலங்கள்

**விஜே குமாரதுங்க, காமினி பொன்சேக, மாலினி பொன்சேக, கீதா குமாரதுங்க என்ற நடிகர்கள் வரிசையில் அரசியலுக்கு வந்த ரஞ்சன் ராமநாயக்க என்ற நடிகர் சிங்கள அரசியல் அரங்கில் சகலரையும் திணறடிக்க வைத்துள்ளார். இதனால் பிரதமர், அமைச்சர்கள் மட்டுமன்றி பலர் கேள்விக்குறியாகி உள்ளனர். கோதா அரசு புலி வாலைப் பிடித்த நிலையிலுள்ளது.**



ரஞ்சன் ராமநாயக்கா

இலங்கையின் சிங்கள பௌத்த அரசியலில் இப்போது அதிகம் பேசப்படுபவர் அல்லது பேசுபொருளாக இருப்பவர் ரஞ்சன் ராமநாயக்க எனும் இளம் அரசியல்வாதி.

இவரை அரசியல்வாதி என்பதிலும் பார்க்க தலைசிறந்த நடிகர், பாடகர், திரைப்பட தயாரிப்பாளர் என கலைஞர்களில் ஓர் ஆல்ரவுண்டர் என்று கூறுவதே பொருத்தம்.

கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சி பிரசாரகராக விளங்கியதோடு, எதிர்கட்சியினரை கைக்குள் இருந்த ஆதாரங்களை கூறி கிழித்துத் தள்ளியவர்.

அரசியல் பழிவாங்கலாக இவரது இல்லத்தை இந்த மாதம் நான்காம் திகதி சோதனையிட்ட புலனாய்வுத்துறையினர், அனுமதிப் பத்திரம் பெறாத கைத்துப்பாக்கி அங்கிருந்து மீட்டதாக அறிவித்தனர். அத்துடன் சில ஒலிப்பதிவு தட்டுகளையும் மீட்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்த ஒலித்தட்டுகளில் பலதுறைப் பிரமுகர்களுடன் ரஞ்சன் நடத்திய உரையாடல்கள் பதியப்பட்டிருந்தன. இவற்றுள் சிலவற்றை சில சமூக ஊடகங்கள் எவ்வாறோபெற்று வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன.

நீதிபதிகள், அரசியல்வாதிகள், அவர்களின் மனைவிமார், சில நடிகைகள் என்று பலதரப்பட்டோருடனான உரையாடல்கள் இதில் இடம்பெற்றிருந்ததால், விளக்கமறியலிலுள்ள ரஞ்சனின் கைது, கோதபாய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புலி வாலைப் பிடித்த கதையாகியுள்ளது.

சப்ரகமுவ மாகாணசபையின் எதிர்கட்சித் தலைவர் பதவியுடன் ஆரம்பமான இவரது அரசியல் வாழ்வு, பின்னர் கட்டான தொகுதி எம்.பியாக்கி ராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளையும் பெற வழிசமைத்தது.

ஆனால், அவரது துடுக்குத்தனம் பலருக்கு சங்கடங்களை ஏற்படுத்தியதோடு இவரையும் நெருக்கடிக்குள் தள்ளியது. இதனால் ஐக்கிய தேசிய கட்சி இவரைத் தற்காலிகமாக வெளியேற்றியுள்ளது.

விளக்கமறியலில் இருந்தவாறு நாடாளுமன்றம் சென்ற இவர் முக்கியமான ஒரு உரையை அங்கு நிகழ்த்தி அனைவரையும் உலுக்கியுள்ளார்.

தாம் பாதுகாப்பாக வைத்திருக்கும் பெட்டகங்களில் மேலும் பல குரல்கள் உள்ளன என்றும், அதில் மகிந்த ராஜபக்சவும் அடங்குவார் என்றும், பல அரசியல்வாதிகளின் உரையாடல் பதிவுகளும் அதில் உண்டென்றும், அவற்றை எடுத்துவர தம்மை இரண்டு நாள் பிணையில் விடுமாறும் இவர் விடுத்த வேண்டுகோள் பலரது அடிவயிற்றைக் கலக்கியுள்ளது.

இவரது ஒலிப்பதிவுகள் அம்பலமானதால் இதுவரை இரண்டு நீதிபதிகள் பதவி இழந்துள்ளனர். இன்னொரு நீதிபதி விசாரணைக்கு முகம் கொடுத்துள்ளார்.

அரசியல்வாதிகள் நீதிபதிகளுடன் தொடர்பு கொள்வதும் அவர்க;டாக தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதும் இதுதான் முதன்முறையன்று.

1970களில் சிறிமாவோ அரசாங்கத்தில் நீதியமைச்சராகவிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க சில நீதிபதிகளின் சுதந்திரத்தில் தலையிட்டு அவர்களை தனது கால்களுக்குள் போட்டு நசுக்கியதை நாடாளுமன்ற அறிக்கையில் பார்க்கலாம்.

1977ல் பிரதமராகத் தெரிவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது வழக்கறிஞரான நெவில் சமரக்கூன் என்பவரை பிரதம நீதியரசராக நியமித்தார். நியமங்களை மீறி தமது நேரடித் தெரிவாக இந்த நியமனத்தை ஜே.ஆர். வழங்கினார்.

1978 பெப்ரவரி 4ம் திகதி அதே பிரதம நீதியரசரின் முன்னிலையில் காலிமுகத்திடலில் ஜே.ஆர். முதலாவது ஜனாதிபதியாக பதவியேற்றார்.

ஆனால், அடுத்த சில வருடங்களுக்குள் பாடசாலை ஒன்றின் நிகழ்வில் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கூன் உரையாற்றுகையில் ஜே.ஆரை விமர்சனம் செய்ததால் அவர்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டது. சினங்கொண்ட ஜே.ஆர். பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்ய முனைந்தபோது, விடயமறிந்த நெவில் சமரக்கூன் பதவியிலிருந்து தாமாகவே விலகி ஆஸ்திரேலியா சென்று குடியேறிவிட்டார்.

ஆர்.பிரேமதாச ஆட்சிக்காலத்தில் ஒரு வழக்கில் தனக்குச் சாதகமான தீர்ப்பை வழங்க மறுத்த நீதிபதி ஒருவரின் இல்லம் பிரேமதாசவின் கையாட்களால் கல்வீச்சு நடத்தி தாக்கப்பட்டது. பொலிசாரின் உதவியை நீதிபதி கோரியபோதும் அவர்கள் அந்த இடத்துக்குச் செல்லவில்லை.


1994ல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்க வடகிழக்கு இணைந்த மாகாணசபையில் ஆளுனராக காமினியை நியமித்து தாம் விரும்பிய எதையோ நிறைவேற்றிக் கொண்டார். ஆனால் காமினி அரசியல் சாக்கடைக்குள் அமிழ்ந்து போகாது மெதுவாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.

காமினி பொன்சேகவின் பெருமளவான திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்து பெயர் பெற்ற மாலினி பொன்சேக 1968 இலிருந்து திரையுலகில் புகழ் பெற்று விளங்கியவர். 2010ம் ஆண்டு மகிந்த ராஜபக்சவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக நியமனம் பெற்று எம்.பியானார் ஆயினும், இரண்டாண்டுகளின் பின்னர் - 2012ல் அரசியலுக்கு குட்பை கூறிச் சென்றுவிட்டார்.

இந்த வகையில் காமினியும் மாலினியும் (இவர்கள் நிpஜவாழ்வில் கணவன் மனைவி அல்ல) ஒரே முடிவை குறுகிய காலத்தில் எடுத்ததால் தங்கள் பெயரை களங்கப்படுத்தாது தப்பிவிட்டனர்.



விஜே குமாரதுங்கா



காமினி பொன்சேகா



மாலினி பொன்சேகா



கீதா குமாரதுங்கா

இந்த விடயங்களை தெரிந்து கொண்ட ரஞ்சன் ராமநாயக்கவின் விவகாரம் அப்போதைய சம்பவங்கள் போன்று பார்க்கப்படவில்லை. எனெனினும் இவரது எம்.பி. பதவியை பறிக்க ஒலிப்பதிவுகளை சரியான ஆதாரமாக்கப் பார்க்கிறது ராஜபக்ச குடும்பம்.

இச்சந்தர்ப்பத்தில், சிங்கள அரசியலில் ஏற்றமும் இறக்கமும் கண்ட சில நடிகர்களின் கடந்த கால வரலாற்றைப் பார்ப்பது நல்லது.

123 திரைப்படங்களில் நடித்து சிங்களத் திரைவானில் உச்சத்தில் இருந்த விஜேகுமாரதுங்க சிறிலங்கா மகாஜனக் கட்சியின் நிறுவனர். சந்திரிகா பண்டாரநாயக்கவை திருமணம் செய்த பின்னர் சுதந்திரக் கட்சியில் இணைந்து அதன் தேசிய அமைப்பாளரானார்.

1977ல் கட்டான தொகுதியில் பெருவெற்றி பெற்று நாடாளுமன்றம் புகுந்த இவரை ஜனாதிபதி ஜெயவர்த்தன நக்சலைட் என்று கூறி சில காலம் சிறைக்குள் தள்ளினார். அரசியலில் ஒரு துருவமாக ஓங்கி வளர்ந்து சென்ற இவர் 1988 பெப்ரவரியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனைச் செய்தவர்கள் ஜே.வி.பி.யின் ராணுவப் பிரிவினர் என்று சொல்லப்பட்டது. ஆனால் விசாரணை ஆணைக்குழு அறிக்கை ஆர்.பிரேமதாச மற்றும் அமைச்சர்களான றஞ்சன் விஜேரத்ன, காமினி லொக்குகே ஆகியோரை குற்றம் சாட்டியது.

இவர்களுள் முதல் இருவரும் கொழும்பில் வெவ்வேறு சம்பவங்களில் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர். காமினி லொக்குகே இப்போதும் அரசியலில் உள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசவினால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர் பிரபல கதாநாயக நடிகர் காமினி பொன்சேக. 1989ல் ஐக்கிய தேசிய கட்சி ஊடாக மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு எம்.பியானவர் காமினி. இவருக்கு பிரதிச் சபாநாயகர் பதவியும் பிரேமதாசவினால் வழங்கப்பட்டது.

இன்னொரு சிங்கள் நடிகையான கீதா குமாரதுங்க 2017 மே மாதம் நடைபெற்ற தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

மைத்திரி - ரணில் அரசு நிறைவேற்றிய 19வது அரசியல் திருத்தம் இவரது பதவிக்கு ஆப்பு வைத்தது. இரட்டைப் பிரஜாவுரிமைகள் பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் பதவி வகிக்க முடியாது என்ற புதிய சட்டத்திருத்தத்தால் கீதா குமாரதுங்க பதவி இழக்க நேர்ந்தது.

இலங்கைப் பிரஜாவுரிமையுடன் சுவிஸ் நாட்டுப் பிரஜாவுரிமையையும் இவர் வைத்திருந்ததால் மேன்முறையீட்டு நீதிமன்றம் இவரது எம்.பி. பதவியை பறித்தெடுத்தது.

இவர்களைப் போன்று ரஞ்சன் ராமநாயக்க தப்பியோடக் கூடியவராகத் தெரியவில்லை. 'நான் மருத்துவமனைக்குச் சென்று படுக்க மாட்டேன். சிறைச்சாலைக்குச் சென்று எல்லா உண்மைகளையும் வெளிப்படுத்துவேன்" என்ற இவரது கூற்று ஏதோ ஒன்றை சொல்லாமற் சொல்கிறது. பல அரசியற் பிரமுகர்களின் மனைவிமார், துணைவிமாரின் ஒலிப்பதிவுகள் இவரிடம் இருந்துள்ளன என்பது தற்போது பரம ரகசியம்.

ஏன் இதனைச் செய்தார்? எதிர்கால அரசியல்திட்டம் ஏதாவது இவருக்குண்டா? இவர் ஒரு மனநோயாளி இல்லை என்பதால் விசாரணைகளின் பின்னர் பல அதிர்ச்சியான தகவல்கள் வெளிவருமென எல்லாக் கட்சி அரசியல்வாதிகளுமே நம்புகின்றனர்.

அடுத்த சில மாதங்களுள் வரவிருக்கும் பொதுத்தேர்தல் இந்தக் கேள்விகளுக்கு பதிலைத் தரும்.

நல்லவேளை, தமிழர் தரப்பில் ஒரு நடிகர்கூட அரசியல்வாதியாக தெரிவாகி நாடாளுமன்றம் செல்லவில்லை. ஆனால் பல தமிழ் அரசியல்வாதிகள் வாழ்நாள் நடிகர்களாக எம் மத்தியில் உலா வருகின்றனர். சந்தர்ப்பம் வரும்போது அவர்களை சந்திப்போம். ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## பெண் உதவியாளர் தேவை

BRENT WOOD பகுதியில்,
வைத்திய நிபுணர் வீட்டில்
தங்கியிருந்து சுகவீனமான
அவரது மனைவியின்
தேவைகளைப் பொறுப்புடன்
கவனிப்பதற்கு
பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு :
07956579239


# இலங்கையிலும் சீனா 'கொரோனா'

**இலங்கையில் சீனாவின் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு இலக்கான முதலாவது நோயாளி கடந்த 27ம் திகதி அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

அங்கொடையில் தொற்று நோய் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த 43 வயதான சீன நாட்டுப் பெண் ஒருவரே பாதிக்கப்பட்டவர். சீனாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளை கட்டுநாயக்கா விமான நிலையத்தின் விகேட வெளியேறும் பிரிவில் பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சீனாவில் அசுர வேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் தாக்கி இதுவரை 86பேர் பரியாகியுள்ளனர். அங்கு 2,752 பேர் இந்த வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 2ஆயிரம் பேர் வரை வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 400பேருடைய நிலைமை கவலைக் கிடமாக உள்ளது.


Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER
183, Burnt Oak Broadway,
Edgware, Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
10.04.1926



இறப்பு
16.01.2020

## திருமதி. யோகராணி நடராசா
(இணுவில்கிழக்கு-லண்டன்)

இணுவில் கிழக்கு, லண்டன் HARROW ஆகிய இடங்களில் வசித்தவருமான எங்கள் அன்புத் தெய்வம் திருமதி.யோகராணி நடராசா அவர்கள் 16.01.2020 அன்று லண்டன் HARROWவில் இறைவனடி சேர்ந்தார் உணர்வோடு உறவுகளை நேசித்த அன்னையை கண்ணீர் துளிகளால் அர்ச்சிக்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

**எங்கள் நினைவுகளில் வாழும் தெய்வமே!**

உங்கள் பிரிவுத்துயரால் வாடும், மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள் பூட்டக்குழந்தைகள், உற்றார் உறவினர்

தகவல் : குடும்பத்தினர் - 07788196426

# உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

## திருவிழாக்களும் விசேட பூசைகளும்
Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

FEBRUARY - 2020 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 03 | Monday | Kaarthikai Viratham | கார்த்திகை விரதம் |
| 05 | Wednesday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 06 | Thursday | Prathosa Viratham | பிரதோஷ விரதம் |
| 07 | Friday | Thai Last Friday<br>Eve.7.00 Vilakku Pooja | தை மாத கடைசி வெள்ளி<br>பி.ப.7.00 மணி விளக்கு பூஜை |
| 08 | Saturday | Full Moon<br>Thai Poosam<br>Mor. Kaavadi<br>Eve. Sri Shanmugar Veethi Ula | பௌர்ணமி<br>தைப்பூசம்<br>காலை : காவடி<br>பி.ப. : ஶ்ரீ சண்முகர் வீதி உலா |
| 11 | Tuesday | Sankadakara Chathurti | சங்கடகர சதுர்த்தி |
| 13 | Thursday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| 19 | Wednesday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 20 | Thursday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 21 | Friday | Maha Sivarathiri Eve.7.00 Lord Siva & Ambal Abishekam Eve.7.00 Lord Siva & Ambal Abishekam 10.00 Abisekam, 12.00 Lingkotba Tharsanam; 1.00 a.m. Abishekam 4.00 Abishekam, 4.30 Pooja 5.00 Maheswara Pooja | மஹா சிவராத்திரி பி.ப.7.00 சிவன், அம்பாள் அபிஷேகம் இரவு 10.00 மணி அபிஷேகம் நள்ளிரவு 12.00 மணி லிங்கோற்பவ தரிசனம் (22.02) அதிகாலை 1.00 மணி : அபிஷேகம் காலை 4.00 மணி அபிஷேகம், 4.30 பூஜை 5.00 மணி மகேஸ்வர பூஜை |
| 23 | Sunday | Amaavasai | அமாவாசை |
| 27 | Thursday | Chathurthi Viratham | சதுர்த்தி விரதம் |
| 29 | Saturday | Sasti Viratham | சஷ்டி விரதம் |




# 10 ஆவது தைத் திங்களுக்கு ஹரோ நகரசபை பொங்கல் விழாவில் அங்கீகாரம்

‘எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு’ என்ற உணர்வு இலண்டன் ஹரோ மாநகர சபையில் பொங்கல் பொங்கிப் பிரவாகித்தது.

ஹரோ நகரத்தில் மூன்றாவது பெரிய சமூகமாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துவதைப் போல, பிரித்தானியாவில் 2020 ஜனவரி 15-ஆம் திகதி தமிழ் பாரம்பரிய மாதமாக அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு ஒன்று அரங்கேற்றப்பட்டது.



கடந்த 18-ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஹரோ நகர சபை மண்டபத்தில் இலண்டன் பாபா என்று அன்பாக அழைக்கப்படும் முன்னாள் ஹரோ நகர மேயரும், கவுன்சிலருமான சுரேஷ் கிருஷ்ணா தலைமையில் 10-ஆவது ஆண்டாக நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில், ஹரோ கவுன்சில் தலைவர் கிரஹம ஹென்சன் இந்த அங்கீகாரத்தைப் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் வழங்கினார்.

தமிழர்களின் கலாச்சாரம், பாரம்பரியம் போன்ற தனித்துவமான பெருமைகளை ஹரோவில் வாழும் பல்வேறு சமூகத்தினருடனும் பகிர்ந்து கொள்கின்ற வகையில், நமது தமிழ் குழந்தைகள் தங்கள் கலை, கலாச்சார சிறப்புகளை உணர்த்துவதுபோல தைப்பொங்கல் விழா இங்கு தொடர்ந்து 10-ஆவது ஆண்டாக நடைபெறுகின்றது.






ஹரோ மாநகரத்தின் மேயராகி, ஈழத் தமிழரை உலக அரங்கில் பெருமைப்படுத்திய கவுன்சிலர் லண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணா, மற்றொரு கவுன்சிலர் சசிகலா ஆகிய இரு தமிழ் உறுப்பினர்களின் விடாமுயற்சியும், ஹரோவில் வாழும் தமிழர்களின் ஒத்துழைப்புமே தொடர்ந்து 10 ஆண்டுகள் இந்த விழா நடைபெறுகிறது என்று பெருமைப்படலாம்.




தமிழரின் மங்கல வாத்தியத்துடன் ஹரோ நகர மேயர் நிதின் பரேக் (*Nitin Parekh*) உட்பட முக்கிய பிரமுகர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கவுன்சில் தலைவர் *Graham Henson*, இலண்டன் அசெம்பிளி உறுப்பினர் *Navin Shah*, கவுன்சிலர்கள், முன்னாள் மேயர்கள் கலந்து சிறப்பித்தனர்.

ஹரோ நகரத்தில் இயங்கும் நடனப் பள்ளிகளில் கற்கும் பிள்ளைகளின் நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், முதியோர் நடனம் என்பவற்றுடன் சிறப்புரைகளும் இடம்பெற்றன. ஹரோ தமிழ் பாடசாலை, ஹெண்டன் தமிழ் பாடசாலை மிடில் செக்ஸ் தமிழ் அகடமி, ஹரோ தமிழ் பைன் ஆர்ட்ஸ் பாடசாலை, பிறென்ற் தமிழ் பாடசாலை, தமிழ் விளையாட்டு கழகங்கள் மற்றும் நடன ஆசிரியைகள் ஆகியோரது மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் விழாவில் சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன.

பத்து ஆண்டுகளாக தைப்பொங்கல் விழாக்களுக்குத் தங்கள் பங்களிப்புகளை வழங்கிய பல அமைப்புகளுக்கும், கலைஞர்களுக்கும், உதவியாளர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இனிய பொங்கல் விருந்துபசாரத்துடன் பொங்கி வழிந்த மக்களின் பொங்கல் விழா சிறப்பாக நிறைவு பெற்றது. ●



















**✍ கலாநிதி ஆறு திருமுருகன்**





# தமிழர் வரலாற்றை பறைசாற்றும் அரும்பொருட்காட்சியகம் யாழில்!

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் முதன்முறையாக சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை இந்த அரும்பொருள் காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்படவிருக்கின்றது.

இது தொடர்பில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்தவை வருமாறு :

சுமார் 12 பரப்புக் காணியில் 3 மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நுழைவாயிலில் சங்கிலிய மன்னன், எல்லாள மன்னன் இருவரின் உருவச் சிலைகள் அலங்கரிக்கின்றன. உள்ளே யாழ்ப்பாணப் பேரரசை ஆட்சி செய்த 21 மன்னர்களின் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருக்கும் உருவச் சிலை அமைப்பது வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். இதுவரை சங்கிலியனுக்கு எல்லாளனுக்குப் பண்டார வன்னியனுக்கு சிலை எழுப்பியிருக்கின்றோம்.

ஆனால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாகிய நாவற்குழியில் எமது வரலாற்றுகளிலேயே பதியப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தை அடிப்படையாக வைத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்களின் பெயர்களோடு அவர்கள் ஆட்சி செய்த ஆண்டுகளைப் பதிவு செய்து அவர்களது மாதிரி உருவச் சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி எமது முன்னோர்கள் பயன்படுத்திய வண்டிகள் - கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டில் உட்பட எங்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன.

1950-ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்த 17 மோட்டார்க் கார்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன. தட்டிவான் என்று சொல்லப்படுகின்ற 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அறிமுகமான மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்திய வாகனம் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

முதலாவது தளத்திலே எங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புடைய பாரம்பரியமான பொருள்கள், யாழ்ப்பாணத்தில் தமிழர் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பித்தளைப் பாத்திரங்கள் தொடக்கம் ஆரம்ப காலத்தில் வெளிவந்த கடிகாரம், வானொலிப் பெட்டி, எம் முன்னோர் பயன்படுத்திய அருவிவெட்டும் கருவி, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்து நாணயங்கள், அதன்பின்னர் வெளிவந்த ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணம் உள்பட நாடு முழுவதும் உள்ள பகுதிகளின் ஒளிப்படங்கள் என இவை எல்லாம் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இரண்டாவது தளத்திலே ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், பாடசாலைகளை நிறுவிய நிறுவுநர்கள் மற்றும் எமது சமய, கலாச்சார நிகழ்வுகளான சூரன்போர், நல்லூர் கந்தசுவாமி ஆலய மிகப் பழமை வாய்ந்த தோற்றங்கள், நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றை வெளிப்படுத்துகின்ற பெயர்கள், கீரிமலை நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதி ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பழைய பத்திரிகைகள் - 1800ஆம் ஆண்டுகளிலிருந்து யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் முதலாம் நாள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளின் முன்பக்கம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 3 ஆயிரம் ஒளிப்படங்களைக் கொண்டு இரண்டாவது தள மாடியில் வரலாற்று அடையாளங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மூன்றாவது தளத்திலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களால் வரையப்பட்ட மரபு ரீதியான ஓவியங்கள் - எங்கள் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்ற ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மிகப் பெறுமதியான வரலாற்றுத் தடயங்களைக் காட்சிப்படுத்தவிருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு எனச் சொந்தமான அரும்பொருள் காட்சியகம் இல்லை என்ற குறையினாலே - அதுபற்றிய அறிவு - ஆர்வம் எமது சமுதாயத்திலே இல்லாமல் போனதன் காரணமாக இங்கே இருந்த எமது அடையாளப் பொருள்களை தென்னிலங்கை வியாபாரிகள் வந்து வாங்கிச் சென்று தென்னிலங்கையிலும் வெளிநாடுகளுக்கும் அனுப்பிவிட்டார்கள்.

பழைய வீடுகளிலிருந்த பொருள்கள் எல்லாம் போய்விட்டன. எமது அடையாளங்கள் போய்விட்டன. ஆலயங்களில் இருந்த மிகப் பெறுமதியான வாகனங்கள்கூட விற்பனையாகிவிட்டன. தற்போது தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்து வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இது மிகக் கவலையான விடயம். எங்களுடைய மண்ணிலே ஓர் அரும்பொருள் காட்சியகம் உருவாக வேண்டும் என்று பலர் விருப்பப்பட்டனர். காலஞ்சென்ற கலைஞானி செல்வரட்ணம் என்கின்ற இந்தத் துறையிலே ஆர்வமானவர், அவர் எவ்வளவோ முயற்சிகளை எடுத்தார்.

பேராசிரியர் கனகரட்ணம் மற்றும் குரும்சிட்டிக் கனகரட்ணம் என்று சொல்லப்படுகின்ற கண்டியில் வாழ்ந்த ஓர் அறிஞர் வீரகேசரிப் பத்திரிகை தொடக்கம் பலவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தவர், எப்படியாவது யாழ்ப்பாணத்தில் ஓர் அரும்பொருள் காட்சியகத்தை உருவாக்கி மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று காத்திருந்தார். எனினும் போர்ச்சூழலால் முடியவில்லை. அவர்கள் எல்லாம் மறைந்துவிட்டனர். அவர்கள் தேடி வைத்த பல பொருள்களும் அழிந்துவிட்டன.

இந்த நிலையிலேதான் சிவபூமி அறக்கட்டளை என்கின்ற எமது அமைப்பு 17 ஆண்டுகளாக வடபுலத்திலே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, உறவுகளால் கைவிடப்பட்ட முதியோர்களுக்கான இல்லம் மற்றும் கீரிமலை புண்ணிய தலத்திலே 11 மடங்கள் போரினால் அழிவடைந்த நிலையில் அங்கே ஒரு மடத்தைக் கட்டி எங்கள் பாரம்பரியங்களைப் பாதுகாக்கின்றோம்.

அதேபோன்று கிளிநொச்சியிலே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, திருகோணமலை கோணேஸ்வரம் ஆலய காணியிலேயே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை - மடம் அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் திருவாசக அரண்மனை என்கின்ற அரண்மனையை 2018-ஆம் ஆண்டு அமைத்து அங்கே 652 திருவாசகப் பாடல்களையும் கருங்கல்லிலே செருக்கியுள்ளோம். அத்துடன், யாழ்ப்பாணம் சிவபூமி என்பதை நிலைநாட்டும் வகையில் 108 சிவலிங்கங்களை அமைத்துள்ளோம்.

இவற்றுக்கு அடுத்த பணியாக சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம் அமைத்து நிறைவேற்றியிருக்கின்றோம். இது தமிழர்களின் சொத்தாகும். என்னைப் பொறுத்தவரை சிறியேன் எத்தனையோ ஆண்டுகள் கண்ட கனவு இப்போது நனவாகிறது. நான் சேகரித்த பொருள்களை தமிழ் மக்களிடம் கையளிப்பதற்காகத்தான் இந்தப் பெரிய அரும்பொருள் காட்சியகத்தை அன்பர்களின் உதவியோடு அமைத்து நிறைவு செய்து கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மன்னர்களை புத்தகங்களில் படித்தோமே தவிர, அவர்களை எமது குழந்தைகளுக்குக் காட்சிப்படுத்தத் தவறிவிட்டோம். இங்கே 21 மன்னர்கள், அவர்கள் ஆட்சி செய்த காலம் எல்லாம் காட்சிப்படுத்துகின்றோம்.

இது அற்புதமான சொத்தாகும். சூரியன், சந்திரன் வானத்திலே நிலைத்திருப்பது போல, இந்த அரும்பொருள் காட்சியகமும் எத்தனை தலைமுறை இந்த மண்ணிலே வாழ்ந்தாலும் நிலைத்திருக்க வேண்டும் என்று எல்லாத் தெய்வங்களிடமும் நான் பிரார்த்திக்கின்றேன்.



பொது மக்களாகிய நீங்கள் இதனைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். உங்களிடமும் ஏதாவது அரும்பொருள்கள் இருந்தால் அவற்றையும் இங்கு கொண்டு வந்து குடும்பத்தின் பெயரைப் பொறித்து பாதுகாப்பாக வையுங்கள்.

எதிர்காலத்திலே வன்னி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் மலையகத்திலும் தமிழர்களுடைய பண்பாடுகளை வெளிப்படுத்தும் அரும்பொருள் காட்சியகங்கள் இதைப் பார்த்து உருவாக வேண்டும். பலர் இந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று அன்போடு வேண்டிக் கொள்கின்றேன்.

இது ஓர் முன்மாதிரியான பணி. இது எந்தவொரு அரசியல் நோக்கத்துக்காகவோ அல்லது வாணிப நோக்கத்துக்காகவோ உருவாக்கப்பட்டது அல்ல. ஈழத் தமிழர்களுடைய வரலாற்றை கண்ணால் கண்டு எமது எதிர்காலச் சந்ததி உணரவேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சியாகும்.

இந்த அரும்பொருள் காட்சியகத்தைச் செயற்படுத்துவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு 50 ரூபாய் அனுமதிச் சீட்டும் ஏனையோருக்கு 100 ரூபாய் அனுமதிச் சீட்டும் வழங்கப்படும் என்று சிவபூமி அறக்கட்டளை தீர்மானித்துள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மக்கள் எத்தனையோ அரும்பொருள் காட்சியகங்களை வைத்துள்ளனர். எத்தனையோ வரலாற்றுத் தடங்களை அவர்கள் பாதுகாக்கிறார்கள். நாங்கள் ஊரிலே எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று சோகத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நாங்கள் நல்ல காரியங்களைத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். இந்தப் பணிக்கு உதவிகளை வழங்கிய அத்தனை பேருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ●


Sky Wings Travel
25
Your Travel Is Our Passion...
Early Bird Offers
Call Us for Special Offers
Book now and Pay Later. Hurry! Limited Availability.
WORLDWIDE SPECIALS
MELBOURNE Fr £588
AUCKLAND Fr £420
NEW YORK Fr £380
SYDNEY Fr £591
TORONTO Fr £344
CHENNAI Fr £377
TRICHY Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
SECURE YOUR BOOKING WITH A DEPOSIT OF £150.00
SriLankan Airlines £506
Emirates £489
QATAR AIRWAYS £485
119 Tooting High Street, London, SW17 0SY
IATA
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
5766 ATOL PROTECTED

# ஊருக்கு உதவும் உயர்ந்த நோக்கு
## தொடரும் தாயகப் பயணம்


டாக்டர் எஸ்.நவரத்தினம்





தாயகத்தை விட்டுப் பிரிந்து வாழ்ந்தாலும், பிறந்த மண்ணையும், பேசும் மொழியையும் மறக்காமல், உறவுகளை உயிராக நேசித்து, அவர்களுக்கு உணர்வோடு உதவுகின்ற உயர்ந்த உள்ளங்கள் நம்மோடு வாழத்தான் செய்கிறார்கள். ஒருமுறையென்ன, ஆண்டுக்கு ஆண்டு, தம்மைப் பெற்று வளர்த்த ஊருக்குச் சென்று அங்கு வாழும் மக்களுக்கும், பள்ளியில் படிக்கும் சிறார்களுக்கும் ஊக்கமளிக்கும் விதத்தில் அள்ளிக் கொடுக்காவிட்டாலும் கிள்ளிக் கொடுக்கின்ற பண்போடு இருக்கின்ற ஒரு சிலரது பெரும் தன்மையைப் போற்றிப் பாராட்டத்தான் வேண்டும்! அந்தச் சிலருள் ஒருவராகக் குறிப்பிடக் கூடியவர் பல்லாண்டு காலம் வைத்திய நிபுணராக இலண்டனில் பணியாற்றுகின்ற டாக்டர் எஸ். நவரத்தினம்.

தெல்லிப்பளையில் விழிசிட்டி கிராமம் அவர் பிறந்து, வளர்ந்தது. இலண்டனில் அவர் குடியேறி நீண்ட நெடிய ஆண்டுகள் பல கடந்துவிட்ட போதிலும், ஒவ்வொரு வருஷமும் ஊருக்குச் செல்வதும், தன் ஊரின் வளத்துக்கு முடிந்ததைச் செய்வதும், அவரது வாழ்க்கைப் பயணத்தில் கடந்த மாதம் வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அந்நிய மண்ணில் ஆங்கில வைத்தியத் துறையில் பட்டம் பெற்று நிபுணராகத் திகழ்ந்தாலும், தமிழ் மண்ணையும், தமிழர்களையும் தம் நெஞ்சோடு நெருக்கி வைத்திருக்கிறார்.

விழிசிட்டி கிராமத்தில் தன் ஊர் மக்களுக்கு என்று அமைத்துக் கொடுத்த விழிசிட்டி சனசமூக நிலையம் நிமிர்ந்து நிற்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சனசமூக நிலையத்துடன் இணைந்த முறையில் மக்களும், பெற்றோர்களும், பிள்ளைகளும் கூடி, வைத்திய நிபுணர் உரிமையோடு வழங்குகின்ற பயனுள்ள அன்பளிப்புகளைப் பெற்றுச் செல்வார்கள்.

வைத்திய நிபுணர் டாக்டர் நவரத்தினம் தனது ஊர் மக்களோடு சேர்ந்து கொண்டாடி மகிழ்வதற்காக இலண்டனில் இருந்து அங்கு சென்று, நடத்தப்பட்ட விழா கடந்த மாதம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் என். தேவநாயகன், மகாஜனா கல்லூரி அதிபர் எம். மணிசேகரன், ஈழத் தமிழர்களின் அன்புக்குரியவராகத் திகழும் ஆன்மிகப் பணியாளர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுகன், கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்ட இவ்விழாவில், விழிசிட்டி மக்களும் பிள்ளைகளும் ஒன்றுதிரண்டு பங்குகொண்டனர்.

நூறு பிள்ளைகளுக்கு புத்தகங்களும், நூறு பெற்றோர்களுக்கு கறிவேப்பிலை உட்பட 5 வகையான பயனுள்ள


மகாஜனா அதிபர்


யாழ்.அரசாங்க அதிபர்

மரக்கன்றுகளையும் வைத்திய நிபுணர் டாக்டர் நவரத்தினத்தின் அன்பளிப்பாகவும், பள்ளிக்குச் செல்வதற்கான சைக்கிள்கள் ஐவருக்கும் வழங்கப்பட்டன. வசதி குறைந்த நிலையில் உள்ள பலருக்கு பண உதவியும் வழங்கப்பட்டது.

வளமான வாழ்வுடனும், கல்வியில் ஏற்றமுடன் வளர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, வைத்திய நிபுணரின் உதவும் உள்ளத்தை பயன்படுத்தி, பயனுள்ளதாக்க வேண்டுமென்று பேச்சாளர்கள் வலியுறுத்தினார்கள். அவருடைய மறக்காத நேயத்தைப் பாராட்டினார்கள்.

தான் பிறந்து வளர்ந்த ஊரை உயிருள்ள வரை தன்னால் மறக்க முடியாது என்றும், இங்கு வளரும் எதிர்கால சந்ததியினர் ஒழுக்கமுள்ள சிறார்களாகவும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் டாக்டர் நவரத்தினம் தமது ஏற்புரையில் குறிப்பிட்டார்.

ஊர் மக்கள் மனங்களை நிறைத்த நிறைவான விழாவாக நிறைவு பெற்றது.

# எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் ‘லண்டன் 1995’

## சிறுகதை நூல் வெளியீடு




இலங்கைத் தமிழ் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் மிக நீண்ட காலமாக சிறுகதை, நாவல் மற்றும் பெண் உடல் நலம் குறித்து நிறைய எழுதி வருபவர். ‘ராஜேஸ் அக்கா’ என பலராலும் செல்லமாக அழைக்கப்படும் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களாகும். ஐரோப்பிய புகலிட வாழ்வில் 50 ஆண்டு கால எழுத்துலக பங்களிப்பு அவருக்கு உண்டு. அவரது படைப்புகள் தற்போது இந்தியாவில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1970 களில் பிரித்தானியாவிற்குப் புலம்பெயர்ந்த அவர், தமிழ் எழுத்துத்துறையில் மட்டுமல்லாது அரசியல் களச் செயற்பாடுகளிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். அதன் காரணமாக பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய வாழ்வுச் சூழலை அவர் நன்கு புரிந்திருந்தார். 1980களின் பின்னர் இலங்கைத் தமிழரின் ஐரோப்பிய வருகை அதிகரித்திருந்தது. பிரித்தானியாவிலும் கணிசமான இலங்கைத் தமிழர் குடியேறியதால், அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் புதியவையாக அமைந்தன. முற்றிலும் கிழக்கு ஆசிய விவசாய பின்னணியைக் கொண்டிருந்த இலங்கையர்கள், ஐரோப்பிய தொழிற்துறைக் கலாச்சார வாழ்வில் தம்மை இணைத்துக் கொள்வதில் பெரும் சவால்களை எதிர்கொண்டனர். குறிப்பாக 1980, 90 களில் புகலிட வாழ்வுக்குள் சிக்குண்ட இலங்கைத் தமிழ்ப் பெண்கள் எவ்வாறு ஐரோப்பிய கலாச்சாரத்தை தமது தமிழ்க் கலாச்சாரங்களுடன் சகித்து வாழப் பழகினர்? என்பதன் அனுபவ வெளிப்பாடாக ‘லண்டன் 1995’ என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

ராஜேஸ் பாலாவின் 50 ஆண்டுகால எழுத்துலக வாழ்வைக் கௌரவிக்கும் வகையில் அந் நூலின் வெளியீட்டினை அவரது எழுத்துலக நண்பர்கள் கொண்டாடினர். இந்நிகழ்வு பிரித்தானியாவிலுள்ள தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியாகிய ‘ஈஸ்ற்காம்’ இலுள்ள தமிழ்ச் சங்க மண்டபத்தில் சிவலிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

‘லண்டன் 1995’ என்ற அச் சிறுகதைத் தொகுதி குறித்த ஆய்வுரைகள் எழுத்தாளர்களான திரு. மு. நித்தியானந்தன், திருமதி. சந்திரா ரவீந்திரன், சுகுணசபேசன் போன்றோருடன் அவரது எழுத்துக்களைப் பிரித்தானியாவில் பல்வேறு தரப்பினருக்கு அறிமுகம் செய்து வைத்த அவரது நீண்ட கால நண்பரான சச்சிதானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்திச் சிறப்பித்தனர்.



ஏ.ஜே.ஞானேந்திரன்



## நான்கு நாட்களில் 70,000 டொலர்கள்

காட்டுத் தீ, நாட்டையே பொசுக்குகின்றது.. மிருகங்கள் அழிகின்றன.. மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள். வீடுகள் நாசமாக்கப்படுகின்றன. நாட்டில் பற்றியெரியும் இன்றைய பிரச்சினை இதுதான். அவுஸ்திரேலிய அரசுக்கு உதவி செய்யும் நோக்கில், அமெரிக்க பிரபல்யங்கள், மும்முரமாக பணச் சேகரிப்பில் இறங்கியிருக்கிறார்கள். 20 வயதான கெய்லன் வார்ட் என்ற மாடல் அழகி, வித்தியாசமான முறையில், பணம் சேகரிக்க முனைந்திருக்கிறார். 4 நாட்களில் 70,000 டொலர்கள் சேகரித்துவிட்டார்.10 டொலருக்கும் அதிகமாக பண உதவி அளிப்போருக்கு, நன்றி செலுத்த தனது நிர்வாண போட்டோவை அனுப்பி வைக்கிறார் இந்த அழகி! கலிபோர்னிய அழகியான இவர் தொழிலால் "மாடலிங்" செய்து பிழைப்பவர்! தன் பங்கிற்கும் 1000 டொலர் வழங்கியிருக்கிறார். அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கு மாகாணங்களில் கடந்த 4 மாதங்களாக எரிந்து வரும் காட்டுத்தீ, அங்கு இதுவரை இல்லாத அளவுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 24 பேரை பலி கொண்ட இந்தக் காட்டுத்தீயில் பறவைகள், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன என சுமார் 100 கோடி வன உயிரினங்கள் செத்து மடிந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. . காட்டுத்தீ நிவாரணத்துக்காக அந்த நாட்டு அரசு பெரும்பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. .கொடி படர தேரைக் கொடுத்தான் பாரி.. கொடை வழங்க ஆடைகளையே கொடுக்கிறாள் இந்தக் காரிகை!

## பறக்கும் டாக்ஸி பார்ப்போமா?



"கடும் வேகத்தில் பறக்கிறது" என்ற சொல்லடையை, அதி வேகமாக செலுத்தப்படும் ஒரு வாகனத்திற்கு சொல்வதுண்டு. ஆனால் இப்பொழுது நிஜத்தில், வாகனங்களும் விமானத்தைப் போல் பறக்கப் போகின்றன. ஹுண்டாய் நிறுவனமும், வாகன பகிர்வுச் சேவை நிறுவனமான ஊபரும் இணைந்து பறக்கும் வாடகைக் காரை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளன. லாஸ் வேகாஸ் நகரில் சமீபத்தில் நடந்த வாகன கண்காட்சியில் இது பற்றிய அறிவிப்பு வெளியானது.ஒரு முறை மின்னூட்டம் செய்தால் 100 கிலோ மீற்றர் தூரம் பறக்க வல்லது. 4 பேர் அமரும் வகையில் இருக்கை வசதியும், பயணப் பெட்டிகளை வைக்கும் வசதியும் இருக்கும். ஹுண்டாய் நிறுவனம் வடிவமைக்கும். இந்தப் பறக்கும் டாக்ஸி,1000 அடி முதல் 2000 அடி உயரத்தில் மணிக்கு 290 கிலோ மீற்றர் என்ற அதிகபட்ச வேகத்தில் பறக்கும். முழுதும் மின்சக்தியால் இந்த வாகனம் இயக்கப்படும். முதலில் ஓட்டுநர் உதவியுடனும் பின்னர் தானாகப் பறக்கும் வகையிலும் இவற்றை உருவாக்க போகிறது ஹுண்டாய் !!!




## பந்தாட்டமும் பதினாறு கொலைகளும்



மெக்ஸிக்கோவின் சிறைச்சாலைக் கைதிகள், புதுவருட தினமன்று குதூகலமாக கால்பந்தாடியது, இறுதியில் 16 உயிர்களைப் பந்தாடி இருக்கின்றது. மெக்ஸிக்கோவின் படு மோசமான போதை வஸ்து கடத்தல் கும்பல்களின் பல "பிரபல்யங்களை" அடைத்து வைத்திருப்பதுதான் இந்த ஜெயில்! இரண்டு கும்பல்களின் இரு அணிகள் சினேகபூர்வமாக விளையாடிய ஆட்டமே, கொலைகள் விழும் ஆட்டமாக மாறியிருக்கின்றது. இந்த நாளில், கைதிகளின் உறவினர்களின் சந்திப்பு, நாள் முழுவதும் அனுமதிக்கப்பட்டது. ஜாலியாக நாள் கழியும் என்ற எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளிப்போட்டது, விளையாட்டின் ஒரு "பெனால்டி" விவகாரம்! சிறைக்குள் எப்படி நீண்ட குழல் துப்பாக்கிகள் முளைத்தனவோ தெரியவில்லை...16 தலைகள் வீழ்த்தப்பட்டு 3 மணி நேரம் நீடித்த கலவரம் அடக்கப்பட்டிருக்கின்றது. ஐவர் படுகாயமடைந்துளளார்கள். 1000க்கு மேற்பட்ட Cieneguillasசிறை, அரசுக்கு ஒரு பெரும் தலையிடி தரும் விவகாரமாகவே இருந்து வருகின்றது.....

## கணவனின் விலை 17 டொலர்கள்



பிள்ளைகளுக்கு மாற்றுடை வாங்கிக் கொடுக்க கையில் பணம் இல்லை. பாவம் என்ன செய்வாள் அந்தத் தாய்? தன் கணவனை அவனது ஆசைநாயகிக்கு விற்றதுதான் அவள் அதிரடியாகச் செய்த காரியம்!அந்தக் கென்ய நாட்டுப் பெண்ணின் பெயர் எட்னா முக்வானா. தன் வீட்டுக் கட்டிலில் தன் கணவனை அவனது ஆசைநாயகியுடன் ஜோடியாக, கையும் மெய்யுமாகப் பிடித்த பின் அவள், கணவனை அடிக்காத குறையாக ஏசி, வீட்டை விட்டு துரத்தி விட்டாள். ஒரு வாரத்திற்கு பின்பு, 2000 கென்ய ஷில்லிங்(சுமாராக 3000ரூபா) தொகைக்கு, கணவனின் ஆசைநாயகிக்கு விற்றுவிட்டாள். புதுவருடத்தில் பிள்ளைகள் புத்தாடைகளை அணிய இந்தப் பணம் அவளுக்கு உதவியிருக்கின்றது. தான் 4000ரூபா வரையில் கேட்டதாகவும், ஆனால் ஆசைநாயகி, 3000தான் தந்தாள் என்றும் கூறியிருக்கிறாள் எட்னா. கணவன் திரும்ப வந்து சேரும் வாய்ப்பு இருக்கிறதா என்று இவளிடம் கேட்டபோது, ஐயோ சனியன் விட்டது.

புதுவருடமாவது நன்றாக இருக்கட்டும் என்று சலிப்போது வந்துள்ளது பதில்!

## சுட்டுக் கொல்லப்படும் 10,000 ஒட்டகங்கள்



வறட்சி... குடிநீர் பற்றாக்குறை... பலியாகின்றன பல்லாயிரம் ஒட்டகங்கள்! எங்கே இந்த (அ)நியாயம் என்று கேட்கிறீர்களா? வறட்சியால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் தெ.அவுஸ்திரேலியாவில்தான்! வனாந்தரங்களில் திரியும் பெருந்தொகையான ஒட்டகங்கள், இங்குள்ள நீரைக் குடித்து வறட்சியை இன்னும் மோசமான நிலைக்கு கொண்டுவரலாம் என்ற பயத்தில்தான், அரசு இந்த முன்னேற்பாடான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றது. உலங்கு வானூர்தியில் பறந்து திரிந்து, இந்த ஒட்டக வேட்டையை நடாத்தப் போகிறார்கள். இங்கு வாழும் பழங்குடி மக்கள் முறைப்பாட்டை அடுத்தே, ஒட்டகங்களை சுட்டுக் கொல்லும் முடிவை அரசு எடுத்துள்ளது. இவற்றைக் கொல்ல இன்னொரு காரணமும் இருக்கின்றது. இவை வெளிப்படுத்தும் மீதேனின் அளவு, (ஆண்டொன்றுக்கு ஒரு தொன் காபனீர்ஒக்ஸைட்)சூழலை மாசுபடுத்தி வருகின்றது. இப்படி மிருகங்களை இடையிடையே கொன்றழித்து சமநிலைப்படுத்தப்படாவிட்டால், பத்து வருடங்களில் இரட்டிப்பாகி விடும் இந்த மிருகங்கள் தொகை!!!

# 2020 குறள் மருத்துவம்



**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

2020 'ஆங்கிலப் புத்தாண்டு' ஆரோக்கியமாக அமையட்டும். ஆண்டவன் அருள் புரியட்டும்! உலகெங்கும் கிறிஸ்துக்கு முன் (கி.மு.), கிறிஸ்துக்குப்பின் (கி.பி.) என்று வருடக்கணக்குகள் கணிக்கப்பட்டுள்ளன. கி.பி.2020 என்பது இப்போது உதித்திருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு. 2020 புத்தாண்டு வாழ்த்துக்களின் ஆரவாரம் சற்றுக் குறைந்தவுடன், தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகை களை கட்டிவிடும். அதனைத் தொடர்ந்து சித்திரை வருடப் பிறப்பு சிறப்புடன் தலை நீட்டும். தமிழ் புத்தாண்டு சித்திரை முதல் நாளா? தை முதல் நாளா? என்ற சர்ச்சையும் சமீப காலங்களில் மேலோங்கியுள்ளது. தமிழ் புத்தாண்டு, ஆங்கிலப் புத்தாண்டு ஆரவாரத்தில் திருவள்ளுவர் ஆண்டு என்று ஒரு காலக்கணிப்பு இருப்பதே நம்முடைய கவனத்தை விட்டு அகன்றுவிட்டது.



திருவள்ளுவரும் திருக்குறளும் - தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை அளிப்பவை. திருக்குறள் 'உலகப் பொதுமறை' என்று அனைவராலும் போற்றிப் புகழப்படுகிறது. உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, 'குறள் அமுது' எல்லோராலும் பருகப்படுகிறது. இவ்வாறு பெருமை கொண்ட திருக்குறளில் நம் ஆரோக்கிய வாழ்வுக்காகவே 'மருந்து' என்று ஒரு அதிகாரமும், அதில் 10 குறட்பாக்களும் சிறப்பாகத் தெய்வப் புலவர் திருவள்ளுவரால் அருளப்பட்டுள்ளது. 'மருந்து' அதிகாரத்தின் அனைத்துக் குறள்களும் எக்காலத்துக்கும் பொருந்தும். முக்கியமாக இந்தப் புதிய ஆண்டில் நாம் அனைவரும் படித்து, சிந்தித்து, அறிந்து, கடைப்பிடிக்க வேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளை அற்புதமாய்ப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

மருந்து அதிகாரத்தில் சரியான மருத்துவ சிகிச்சை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து வள்ளுவன் பின்வருமாறு 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்று மிகத் தெளிவாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவுபட விளக்கியுள்ளார்.

ஒரு மருத்துவர் முதலில் நோய் இன்னதென ஆராய வேண்டும். அடுத்து நோய் வந்த காரணத்தை அறிய வேண்டும். அதற்கடுத்து அந்த நோயைக் குணமாக்கும் வழியை சிந்தித்து, ஆராய்ந்து, மருத்துவம் செய்ய வேண்டும். இந்தக் கூற்று எக்காலத்துக்கும், எல்லா மருத்துவர்களுக்கும் மிகவும் பொருத்தமானது. இளநிலை மருத்துவர் முதல் முதிர்ச்சி பெற்ற சிறப்பு மருத்துவர்கள் வரை அனைவரும் கடைப்பிடித்து, நடைமுறைப்படுத்த வேண்டிய அடிப்படை விதியாகும். இன்று நமக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களில் எத்தனை பேர் இந்த நடைமுறையை பின்பற்றுகிறார்கள்? என்று நாம் அனைவரும் அவசியம் சிந்திக்க வேண்டும். இதே கருத்தைத்தான் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த டாக்டர் C.F. சாமுவேல் ஹனிமன் என்பவரும் 200 வருடங்களுக்கு முன்னர் *'Treat the CAUSE, not the ULTIMATES'* என்று விளம்பியிருக்கின்றார். அதன் அர்த்தம் யாதெனில், வியாதிக்கான மூலக்காரணத்தை ஆய்ந்து, அறிந்து சரியான சிகிச்சை அளித்தால் அந்த நோய் முற்றிலும் குணமாகும் என்பதாகும். மேற்குறிப்பிட்ட மருத்துவரே நீண்ட நெடிய ஆய்வுகளைச் செய்து பக்கவிளைவுகளற்ற பாதுகாப்பான நிரந்தர குணமளிக்கும் ஹோமியோபதி மருத்துவத்தை நிறுவினார்.

டிசம்பர் மாத இறுதியில் லண்டனிலிருந்து ஒரு பெண் தொலைப்பேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு, தன்னுடைய நோய் குறித்து ஆலோசனை கேட்டார். அவர் கூறியதாவது:-

எனக்கு 53 வயது. நவம்பர் மாதம் வருடாந்தர மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள் இடதுபக்க மார்பில் கட்டிகள் இருப்பதாகவும், மேலும் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு, அடுத்தகட்டப் பரிசோதனை நடந்தது. கடந்த வாரம் அதன் முடிவுகளை எனக்குத் தெரிவிக்க மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டேன். அங்கே எனது மார்பகத்தில் புற்றுநோய் அறிகுறிகள் காணப்படுகின்றது என்ற அதிர்ச்சியான தகவலை என்னிடமும், குடும்பத்தாரிடமும் கூறினார்கள். மேலும் அடுத்தகட்ட அறுவை சிகிச்சை முதலான நடைமுறைகளை விரைவாக தொடங்குவது நல்லது என்றும் அறிவுறுத்தினார்கள் - என்று கூறினார். மேலும் அவர் எனக்கு உடம்பில் ஒருவிதமான நோவோ, அசௌகரியமோ இல்லை. நான் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். மார்பகத்தை அகற்றுவதில் எனக்கு விருப்பமில்லை என்றும் கூறினார்.

நான் கேட்டேன், "இதற்குமுன்பு எப்போது பரிசோதனை செய்தீர்கள்?" அவர் கூறினார் : "2018-ஆம் ஆண்டு வழக்கமான பரிசோதனைக்குச் சென்ற போது Test-டுகள் செய்து எல்லாம் சரியாக இருக்கிறது என்று அனுப்பி விட்டார்கள்." அவருடைய வயதினைக் கருத்தில் கொண்டு நான் கேட்டேன், "உங்களுக்கு மாதவிடாய் நின்றுவிட்டதா?" (*Menopause*). அவர் கூறினார் : "எனக்கு 4 பிள்ளைகள் இருக்கின்றார்கள். அடுத்து பிள்ளை பெற வேண்டாம் என்பதற்காக COIL வைத்துள்ளேன். 10 வருடங்கள் ஆகின்றது. அடுத்த மாதம் COIL-ஐ அகற்ற வேண்டும்". மேலும் கடந்த 10 வருடங்களாக COIL வைத்த பிறகு மாதவிடாய் ஏற்படுவதில்லை என்றும் கூறினார். காரணம் பளிச்சிட்டது. இயற்கையாக நடைபெற வேண்டிய மாதவிடாய் 'சுழற்சி' நடைபெறாமல் தடைசெய்ததால், மார்பில் கட்டி உருவாகி இருக்கலாமல்லவா? மேலும் உங்கள் மருத்துவரிடம் COIL வைத்திருக்கும் விபரத்தைச் சொல்லி மேலதிக ஆலோசனை பெறுங்கள். இதுகுறித்து வேறு சந்தேகங்கள் ஏற்பட்டால், என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று நம்பிக்கை ஊட்டினேன்.

இயற்கையான மாதவிடாய் சுழற்சியை தடுக்கும் போது ஹோர்மோன்கள் (*Hormones*) செயல்பாட்டு குழப்பத்தால் சிக்கலான உடல் நோய்கள் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு நிறைய இருக்கிறது. காரணத்தைக் கண்டறிவது மிக மிக அவசியம்.

இந்தப் புத்தாண்டில் நான் வாசித்த ஆய்வுக் கட்டுரை ஒன்று எனக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கி ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியது. அந்தக் கட்டுரையின் கருத்து - "20 ஆண்டுகளுக்குப் பிறகு வரப்போகும் 2040-ஆம் ஆண்டில் உலக மக்களின் உணவுத் தேவை இன்றைய தேவையைவிட 80 சதவீதம் மேலதிகமாக இருக்கும். விளைவிக்க வேண்டும். காரணம் யாதெனில், அதிகமாக உணவு இருக்கும், நம்மைவிட உயரமாகவும், பருமனாகவும் வளர்ந்துவரும் நமது பிள்ளைகளின் உணவுத் தேவையும் அவர்களின் உடல் அமைப்பைப் பொறுத்து கூடுதலாகும்." சரிதானே! மெலிதாகவும், உடல் எடை குறைவாகவும் இருப்பவர் குறைவாகவே உணவு உட்கொள்வர். உடல் எடை கூடுதலாக இருக்கும், உயரமாகவோ, பருமனாக இருப்பவர்க்கு சாப்பாடும் கூடுதலாக தேவைதானே!

நம்மைவிட நம் பிள்ளைகள் உயரமாகவும், பருமனாகவும் வளருவதன் பின்னணி என்ன? சீனர்களும், ஜப்பானியரும் கட்டையாகவும் - ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுமார் ஐந்து முதல் ஆறு அடி உயரமுள்ளவராகவும், அதற்கேற்ப உடல் எடை உருவ அமைப்புள்ளவராகவும் - அமெரிக்கர், ஜெர்மனியர் மற்றும் மேற்கு உலகை சேர்ந்தவர்கள் ஆறடிக்கு மேற்பட்ட உயரத்துடனும், அதற்குரிய உடல் பருமனுடனும் தோற்றம் பெற்று இருந்ததே அடிப்படை மரபு சார்ந்த (*Genetical Body Structure*) விடயமாக இருந்தது. ஆனால், சராசரி 5 - 5½ அடி உயரமும் 55 - 65 கிலோ எடையுமுள்ள நம் தமிழ் பெற்றோரின் பிள்ளைகள் ஆறடிக்கு மேல் உயர்ந்தும், 80 - 90 கிலோ எடையுடனும் வளர்ந்து வருவதே இன்றைய நிதர்சனம். இலண்டனில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கூட இதே உருவ அமைப்பில்தான் நம் சந்ததிகள் வளர்ந்து வருவது கண்கூடு. ஏன் இந்த மாற்றம்? வளர்ச்சியா, வீக்கமா? சரியா, தவறா?




ஊரில் இயற்கையாக விளைந்த தானியமும், மரக்கறியும், மாமிசமும்கூட நமக்கு மரபு ரீதியான உடல் அமைப்பையும், ஆரோக்கியத்தையும் வாரி வழங்கியது. மேற்கு உலக அறிவும் விஞ்ஞானமும் - மரபணுக்களை மாற்றி (*Gene Editing and Genetically Modified*) நமக்குப் பரிசளித்த விதையில்லா (*Seedless*) கனிகளும், காய்கறிகளும் *Broiler* கோழி இறைச்சியும் மற்றும் ஏராளமாகப் பாலைத் தரும் சீமைப் பசு மாடுகளும் - மேலும் தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும்கூட உபயோகப்படுத்தப்படும் 'வீரியமிக்க மருந்துகளுமே' நம் குழந்தைகளின் அபார-அபரிமித வளர்ச்சியின் பின்புலமாகும். வளர்ச்சிக்குப் பரிசு வேண்டாமா? ஏராளமாகக் கிடைத்துள்ளது. சர்க்கரை வியாதியாகவும் (டயபட்டிக்ஸ்) புற்றுநோயாகவும் மற்றும் மலட்டுத் தன்மை வடிவிலும் கிடைத்துள்ளன. வள்ளுவர் கூறிய 'நோய்முதல் நாடி' உணர்ந்து அறியாவிடில், சிந்தித்து நீக்காவிட்டால் - ஆரோக்கியம் என்பது என்றென்றும் எட்டாக்கனியே, கானல் நீரே.

'ஆரோக்கிய உலகம்' சமைப்போம்! தேவையற்ற நச்சுப் பொருட்களைத் தவிர்ப்போம்! நம் சந்ததிகளுக்குச் சரியான வழிகாட்டுவோம்! பக்கவிளைவுகளற்ற ஹோமியோபதி மருத்துவமும், மற்றும் தெளிவான ஆலோசனையும், வழிகாட்டுதலும், ஆரோக்கிய வாழ்வுக்கு அத்திவாரம்.●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**

# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

## MRT

## Menstrual Regulation Treatment




ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation





ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects




அதீத ரத்தப்போக்கு
Over Bleeding



கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




PCOD
சினைப்பை நீர் கட்டி




பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்

பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

## சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயபட்டிஸ் (Diabetes)




உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

# HOMOEO CARE

இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com



# ரஜினியின் நிஜ அரசியல் அரங்கேற்ற

# இறுதிக் காட்சி ஆரம்பமாகிவிட்டது!

**ரஜினியின் முக்கியமான படம் 'பாபா'. அது ரஜினியின் சொந்த படம். அடிதடி, புகை, குடிப்பழக்கம் என ரௌடியாக வலம் வரும் நாயகன், ஒரு நாத்திகனாகவும் இருப்பார். பிறகு, பாபாவின் அருள் கிடைத்து ஆன்மிகவாதி யாக மாறியதும் மிகவும் நல்லவர் ஆகிவிடுவார். இறுதிக்காட்சி யில் சந்நியாசம் போவார் என எல்லோரும் நினைத்திருக்க, அரசியலுக்கு வருவதுபோல் காட்சி நிறைவுறும்.**

**2002**-ம் ஆண்டில் வந்த 'பாபா' படத்தின் திரைக்காட்சி, 2020-ம் ஆண்டில் நிஜ அரசியலாக அரங்கேற தொடங்கியிருக்கிறது. அரசியலுக்கு வருவேன் என்று படங்களிலும் பேட்டிகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நீண்டகாலமாகச் சொல்லிவந்த நடிகர் ரஜினிகாந்த், கடந்த ஆண்டில்தான் அரசியலுக்கு வருவது உறுதி. 2021-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவேன்' என்று அறிவித்தார்.

அதிலிருந்து அவரை தங்கள் பக்கம் இழுப்பதற்கும், அவருடைய பிம்பத்தை உடைத்து நொறுக்குவதற்கும் இரண்டு துருவங்களிலும் வேலைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. அரசியலுக்கு வருவதாகச் சொன்ன ரஜினி, 'என்னுடையது ஆன்மிக அரசியலாக இருக்கும்' என்று கோடிட்டும் காட்டினார். உடனே, அவர் பா.ஜ.க பக்கம் சாய்வார் என்று பேச்சுகள் எழுந்தன. ஆனால் எனக்கு யாரும் காவிச்சாயம் பூச முடியாது' என்று ரஜினி சொல்ல, எல்லோரும் குழம்பிப்போனார்கள்.

எந்தத் துருவத்தில் நின்றுகொண்டு, யாரை எதிர்க்கப்போகிறார் ரஜினி என்றே எல்லோரும் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்தான், சென்னையில் துக்ளக்' பத்திரிகை விழாவில் பெரியாரைப் பற்றிப் பேசி சர்ச்சைப் பட்டாசைப் பற்றவைத்திருக்கிறார் ரஜினி.

அதற்குக் கடுமையான எதிர்வினைகள் ஏற்பட்ட நிலையில் நான் பேசியதில் தவறில்லை. அதற்காக மன்னிப்பு கேட்க மாட்டேன்" என்றும் சொல்லி, தன் நிலையை அதிரடியாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார் ரஜினி. அந்த விழாவில் ரஜினி பேசியது சரியா... தவறா, அவர் காட்டிய ஆதாரம் உண்மையானதா... பொய்யானதா என்பதை எல்லாம் தாண்டி, அவர் பெரியாரை ஏன் சீண்டினார் என்பதுதான் பல கோடி தமிழர்களின் இதயங்களைத் துளைத்தெடுக்கும் கேள்வியாக இருக்கிறது. இதற்கு ரஜினி தரப்பிலிருந்து வரும் பதில், 'பெரியாரிலிருந்து அவர் தன் அரசியல் போரைத் தொடங்கியிருக்கிறார்' என்பதுதான்.

"தமிழக அரசியலில் வெற்றிடம் இருக்கிறது என்று ஏற்கெனவே பேசியிருக்கும் ரஜினி, இப்போது உள்ள தலைவர்கள் யாரும் தனக்கு நிகரானவர்கள் அல்லர் என்பதை வெளிப்படுத்தும் விதமாகத்தான் தன்னுடைய அரசியலின் எதிர் துருவமாக பெரியாரை வைத்திருக்கிறார்" என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

அதாவது இன்றைய தலைவர்களான தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, மறைந்த தலைவர்கள் அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என யாரைப் பற்றியும் பேசாமல், நேரடியாக திராவிட இயக்கச் சித்தாந்தத்தின் ஆணிவேராக இருக்கும் பெரியாரைப் பற்றி அவர் பேசியதற்கான காரணம் இதுதான் என்பது அவர்களின் வாதம்.

இதையொட்டி ரஜினிக்கு நெருக்கமான வட்டாரத்தில் பேசினோம். "தமிழகத்தில் இப்போதுள்ள கட்சிகளில் தி.மு.க-தான் பலம் பொருந்திய கட்சியாக இருக்கிறது. கருணாநிதி மறைந்த பிறகும் அந்தக் கட்சி வலுவுடன் இருப்பதற்கு, மு.க.ஸ்டாலினின் தலைமை மட்டுமே காரணமல்ல. பா.ஜ.க-வின் அரசியல் சித்தாந்தத்தை வலுவாக எதிர்க்கும் திராவிட இயக்கமாக தி.மு.க-வை மட்டுமே மக்கள் பார்க்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தலில் மட்டுமன்றி, ஆளுங்கட்சியின் பணபலம், அதிகார பலத்தையும் கடந்து முதற்கட்ட உள்ளாட்சித் தேர்தலிலும் தி.மு.க பெற்றுள்ள வெற்றி, இதைத்தான் வெளிப்படுத்தியிருக்கிறது.

ரஜினி யோசிப்பது இதைத்தான். வரும் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுடன் இணைந்தோ, தனியாகவோ களம் இறங்கினாலும் தி.மு.க-வை வீழ்த்த முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு இருக்கிறது. அதனால்தான் தலைவர்களைப் பற்றிப் பேசாமல், பெரியாரைச் சீண்டியிருக்கிறார். இதன்மூலமாக தமிழகத்தில் உள்ள இந்துக்களின் வாக்குகளை ஒருங்கிணைப் பதற்கு அடித்தளமிட்டிருக்கிறார். கூடவே அவரின் ரசிகர்களின் வாக்குகள் போனஸாகக் கிடைக்கும் என்பதும் அவரது கணக்கு.

இந்த விஷயத்தில் அவரை இயக்குவது பா.ஜ.க-வின் தீவிர ஆதரவாளரான 'துக்ளக்' ஆடிட்டர் குருமூர்த்திதான். பெரியார் குறித்து தான் பேசியதற்காக மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று ரஜினி பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கும் போதே குருமூர்த்தி 'ட்வீட்' போட்டு, அந்தப் பேட்டியின் பின்னணியில் நான்தான் இருக்கிறேன்' என்பதை எல்லோருக்கும் காட்டிவிட்டார். ஆக, அனைத்தின் பின்னணியிலும் பா.ஜ.க இருக்கிறது.

தமிழகத்தில் திராவிட இயக்கங்களுக்கு எதிராக இந்துக்களின் வாக்குகளை ஒருங்கிணைக்க ரஜினியைவிட்டால் பா.ஜ.க-வுக்கு வேறு வழியே இல்லை. ரஜினியின் பெரியார் பேச்சுக்கு எதிராக கடும் எதிர்வினைகள் எழுந்த நிலையில், அவருக்கு ஊடகங்களில் ஆதரவு திரட்டியதும், இணையத்தில் கிளம்பிய எதிர்ப்புகளை முறியடிக்க உதவியதும் பா.ஜ.க-தான். ரஜினியின் அரசியல் பாதை இனி இப்படித்தான் இருக்கும். அதை பா.ஜ.க-தான் வகுக்கும். அதேசமயம், எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பதை இப்போது சொல்ல முடியாது" என்றனர்.

ரஜினி 'மன்னிப்பு கேட்க மாட்டேன்' என்று சொன்னதன் பின்னணியில், அவருடைய அரசியல் பிரவேசத்துக்காக ரகசிய டீலிங் நடப்பதாகவும் பேச்சு எழுந்துள்ளது. இதுபற்றி ரஜினியின் உள்விவகாரங்களை அறிந்த சிலரிடம் பேசியபோது, "அரசியலுக்கு வருவது பற்றி ரஜினியிடம் இன்னும் குழப்பம் இருக்கிறது. சினிமாவில் அவர் எவ்வளவோ சம்பாதித் திருந்தாலும் அதை அரசியலுக்குச் செலவிடு வதற்கு அவரது குடும்பத்தில் யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால், அரசியல் கட்சியை ஆரவாரமாகத் தொடங்குவதற்கு பெரிய கட்சியிடமிருந்து பெரும் முதலீட்டை அவர் தரப்பில் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், தொடக்க விழா கொண்டாட்டத்துக்கு 2,500 வாலா பட்டாசு கேட்டவருக்கு 1,000 வாலா பட்டாசுதான் கொடுக்க முடியும் என்பதுபோல் அந்தக் கட்சித் தரப்பில் பேசியிருக்கிறார்கள். அதற்குமே ஆக்ஷன் பிளான் என்ன?" என்றும் கேட்டிருக்கிறார்கள். அப்படி திட்டம் எதுவும் அவரிடம் இல்லை. அதனால், அந்தப் பெரிய கட்சியை உற்சாகப்படுத்தவும் இந்தச் சந்தர்ப்பத்தை ரஜினி தரப்பில் பயன்படுத்திக் கொண்டார்கள்" என்றனர்.

ரஜினியின் 'பாபா' படத்தில் வில்லனின் பெயர் ராமசாமி. நிஜத்தில் இப்போது, ஈ.வெ.ராமசாமி. பாட்ஷா', அண்ணாமலை' என மெகா ஹிட் படங்களை எடுத்த சுரேஷ் கிருஷ்ணாதான் 'பாபா'வையும் இயக்கினார். ஆனாலும், அந்தப் படம் படுதோல்வியடைந்தது.

அரசியலில் ரஜினிக்குக் கிடைக்கப்போவது என்னவோ?

இந்தப் பிரச்னைகளுக்குப் பிறகு ஜனவரி 21ம் தேதி தனது மன்றத்தின் முக்கிய நிர்வாகிகளை அழைத்து நேரடியாகப் பேசியிருக்கிறார் ரஜினி அப்போது, பாபா படத்தின்போது சொன்னதைத்தான் இப்போதும் சொல்கிறேன். இது என் பிரச்னை. மன்றத்தினர் யாரும் வர வேண்டாம். நானே டீல் செய்துகொள்கிறேன். எனக்கு எதிராக யார் வேண்டுமானாலும் போராட்டம் நடத்தட்டும். அதை நான் தனிப்பட்ட முறையில் பார்த்துக்கொள்கிறேன். மன்றத்தினர் அமைதி காக்க வேண்டும். இல்லாவிட்டால், ரஜினி ரௌடித்தனம் செய்கிறார்; கலவரங்களைத் தூண்டிவிடுகிறார் என்றெல்லாம் இட்டுக்கட்டிப் பேசுவார்கள். இதை நான் விரும்பவில்லை. யாரும் சென்னைக்கு வரவும் வேண்டாம். போராட்டமும் நடத்த வேண்டாம். சமூக வலைதளங்களிலும் வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்' என்று சொன்னாராம். வரும் ஆகஸ்ட் மாதம் வரை அமைதியாக இருக்க வேண்டும் என்பது அவரின் எண்ணம்" என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். ●


NANDIKASAREES.CO.UK
FREE UK Delivery
வீட்டில் இருந்தபடியே உங்கள் மனதுக்குப் பிடித்தமான அனைத்து
வகையான புடவைகள், பிளவுஸ்கள் மற்றும் ஃபான்ஸி அணிகலன்கள்
வாங்குவதற்கு நாட வேண்டிய ஒரேயொரு இணையதளம்
www.nandikasarees.co.uk
• Sarees
• Anarkalis
• Lehengas
• Stiched Blouses
• Fancy Jewellery
• Bindis
• and Many More
WORLDWIDE SHIPPING AVAILABLE
Visit our online store www.nandikasarees.co.uk
Contact
Email: info@nandikasarees.co.uk
Phone: 02034418409


ENGINE TEC MOTORS
we offer Facilities for
• Servicing
• Clutches
• Brakes
• Overhauls
• Car Electricals
• Pre - MOT Checks
• ALL Types of Repair & Body Work
• Insurance Work Undertaken
என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்
Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945
Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com
Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE
தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

# சிந்தனை செய் மனமே

டாக்டர். என்.ஜெகநாதன்



‘சிந்தனை செய் மனமே!’ என இறைவனை நினைத்து வேண்டுவதாக, பிரபலமான ஒரு சினிமாப்பாடல் உள்ளது. அது தீவினை அகன்றி விடச் செய்யவுமாக, பாடல் தொடர்கிறது. தீவினையாக நேரக்கூடிய துன்பத்தை நீக்கலாம் எனப் பலர் எண்ணலாம். தீய காரியம் ஆற்றுவதற்கென எழும் சிந்தனையை விடுவிக்குமாறும் அது அமையலாம்.



ஒரு சிந்தனையிலிருந்து விடுபட இன்னொரு சிந்தனை எழ வேண்டிய அவசியத்தை அது உணர்த்துவது. பலவிதமான சிந்தனைகள் ஒரே சமயத்தில் எழுவது மனதைக் குழப்பவே செய்யும்.

சிந்தனையிலிருந்து முற்றாக விடுபடலாம் என யோசிக்கலாம். அதுவும் ஒரு சிந்தனையே! வேலைநிறுத்தம் சாத்தியமாகலாம். சிந்தனை நிறுத்தம் சாதாரண மனிதனுக்கு சாத்தியப்படுமா?

வேலைநிறுத்தம் தொடர்ந்தால் சம்பளம் இழக்கலாம். சிந்தனை நிறுத்தம் நிலைத்தால் காரியமாற்ற முடியாது. எந்த ஒரு காரியம் ஆற்றுவதற்கும் சிந்தனை வேண்டும். அவ்வாறல்லாது நடந்து கொள்பவர்கள் ‘அவசரக் குடுக்கை’யான சுபாவம் கொண்டோராக, அல்லது மனநோய் வாய்ப்பட்டவராக ஆகிறார்கள்.

மனமற்றிருக்கும் சக்தி என்று குறிப்பிடுவது எவ்வாறானது? மனதை அடக்குவது மௌனம் என்றவாறும் இதைக் கருதுவார்கள். அசைவு கொண்ட எதையும் நிறுத்துவதற்குள்ள தடையும் சக்தியாக அமைவதே. எண்ணங்கள் மனதில் ஓடிக்கொண்டிருப்பன. அவற்றை நிறுத்துவதற்கான மனக்கட்டாயமும் இவ்வாறான ஒரு சக்தியெனலாம்.

தியானம் செய்வது எண்ணங்களை நிறுத்துவதானது என்பது பலரின் எண்ணம். ஏதோ ஒன்றில் உன்னிப்பான கவனம் செலுத்துவதே தியானம். எண்ணங்களை தாவிக்கொள்ளாது ஒரே கருத்துடன் ஈடுபட அது உதவும்.

அது மனதுக்கு ஆறுதல் அளிப்பதாக, அதில் நாட்டம் கொண்டிருந்தால் விழிப்புடன் ஆற்றலாம்; இல்லையேல் சலிப்பு *(Boring)* ஏற்படும், தூக்கமும் கண்களைத் தழுவி விடும்.

‘கண்ணும் கருத்துமாக இரு’, எனும்போது பார்வையில் மட்டுமல்லாது, மனதும் ஈர்க்கப்பட வேண்டும். நெடுஞ்சாலையில் வாகனம் செலுத்தும்போது முன்னால் தெரிவதில் மனம் ஈர்க்கப்படாவிடின் தூக்கம் கண்களை சொருகலாம். சொற்பொழிவை கேட்பதில், தொலைக்காட்சியை நோக்குவதில் நேரம் தொடரும்போதும் இவ்வாறு நேரிடலாம். மனம் சலிப்பு அடைவதே இதன் காரணம்.

மோட்டார் வாகன உற்பத்தியில் பிரபலமான *Henry Ford* கூறினார்: “என்னால் சாதிக்க முடியும், சாதிக்க முடியாது என எந்தவிதமாக நம்புவாயோ அதன்படியே, விளைவு அமையும்.”

எண்ணம் திண்மையாகும்போது அது நம்பிக்கையாகிறது. ‘நம்பிக்கையே வாழ்வின் ஒளி’ என்பார்கள். எனினும் அது மெய்மைக்கு புறம்பானதாகின் ‘இலவு காத்த கிளி’யின் கதை போல் ஆகிவிடும்.

‘ஊக்கமது கைவிடேல்’ என்ற முதுமொழியின்படி, ஊக்கம் நிலைநாட்டப்பட நம்பிக்கை அவசியமே. மனம் வைத்தால் எதையும் சாதித்துவிடலாம் என்றவாறும் எண்ணத்தை கைவிடாமல் காரியம் ஆற்றவதன் பலனைக் கூறுவார்கள்.

இது தன்னம்பிக்கையாக அல்லது தனக்கும் மேலான சக்தியூடாக (இறைவனது அனுக்கிரகமாக) அமைவதாகக் கொள்ளலாம். எவ்விதமாயினும் சிந்தனையின் முக்கியத்துவம் இங்கு அமைகிறது.

‘கடவுளை நம்பினோர் கைவிடப்படார்’ என்பார்கள். கைதூக்கி விடுதல் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. முயற்சியில் வெற்றி பெற இறைவனது ஆசியானது இவ்வாறு கைதூக்கப்படுவதாகவே. அது ஒரு மாய சக்தியென நம்புவோர்கள் உளர்.

கானல்நீரை மெய்யென நம்பி, அதைச் சென்றடைய முயற்சியை அதிகரிப்பது வீண். மாயைக்குள்ளான நம்பிக்கையும் அவ்வாறு அமைந்து விடும்.

நோக்கத்தில் நாட்டமின்றி ஊக்கம் காட்டுவது சிரமம். வைத்தியத்துறையில் நாட்டமில்லாத மாணவன், பெற்றோரின் வற்புறுத்தலால் அதற்குப் படிக்க முற்பட்டால் ஊக்கம் காட்டுவது எப்படி? ஏதோ செய்ய வேண்டியுள்ளது என்ற விரக்தியே மனதில் குடிகொள்ளும்.

நாட்டம் ஏக்கமாகி விடுவதும் நல்லதல்ல. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பதான சிந்தனை மனதைக் கெடுத்து விடலாம். ஆசைக்கோர் அளவில்லை என்பார்கள். கொண்டுள்ளதில் திருப்தியை விட இல்லாதிருப்பதையிட்டு மனம் ஏக்கம் கொள்வது ஏன்? போதும் என்ற மனமே அமைதிக்கானது.

சிற்றின்பங்களில் அமைதி கிடையாது; பேரின்பம் என்பதாக அல்லது முக்தியடையும் நோக்கமாக தியானம், இறைவன் துதி செலுத்தும் எண்ணம் கொண்டுள்ளோர்கள் உள்ளார்கள். மனம் முற்றாக ஒன்றிய கருத்துடன்தான் இச்செய்கையில் ஈடுபடுகிறோம்.

அவ்வாறிருக்க மனமற்ற நிலையாக கருதுவது எதை? ஏதோ ஒரு விசேஷ அனுபவத்தை அடையப் பெறலாம் என்பதும், உணர்ச்சி பெருக்கம் மேலோங்குவதால் தன்னை மறந்து விடுவதான நிலையடைவதும் வேறுபட்டு விடுமா?

மானிடப் பிறப்பு அரிது, குருடு, செவிடு, ஊனமில்லாது பிறப்பதும் அரிது என ஏற்கிறோம். அதில் பிசகிவிடினும் வாழ்வை ஓரளவிற்கேனும் கொண்டு நடாத்தவென விசேட பயிற்சிகள், சலுகைகள் என தற்காலத்தில் கிடைக்கவுள்ளன. மூளையில் பாதிப்புடன் பிறந்து விட்டோரது மனம் குழந்தை நிலையில் தேங்கிவிடுவதானது. அது சிந்தனைக் குறைவையும் உடையது.

தனது எண்ணமாற்றல்- மனதின் சிறப்பால் மனிதன் விலங்கினங்களில் மேலானவன் ஆகிறான். அவ்வாறிருக்க மனமற்றிருக்கும் நிலையை எய்துவது அவனது மேன்மைக்கு ஆனதா, மனதை பக்குவப்படுத்துவது என்றல்லவோ ஆக வேண்டும்.

எண்ணமற்ற மனதில் இறைவன் செயல்படுவான் என யாரோ சொல்லிவிட்டதன் அர்த்தமென்ன? எண்ணம், எழுத்தறிவு மனித இனத்துக்கே என அளிக்கப்பட்டது ஏன்? சிந்தனையில் தெளிவு வேண்டும்; கழிவு அல்ல.

எனது எண்ணங்கள் எனது ஆன்மாவுடன் பிணைய வேண்டியதில்லை என்று சொல்லி விடலாம். சத்வ, தமஸ், ரஜஸ் என்ற வகைக்குரியதாக ஆன்மா குணமுடையது எனின் அதன் செயற்பாடுகளுக்கும் எண்ணங்களுக்கும் தொடர்பில்லையா?

அறியாப் பருவத்திலுள்ளவன் உறவினர் எவராவது மரணம் பற்றி மனம் பதறுவதில்லை. பந்தம் பற்றிய அறிவு கொண்டிருந்தவன் மட்டுமே மனம் பதறுவான் அல்லது உணர்ச்சி வசப்படுவான். எதிலும் சம்பந்தம் கொண்டு விட்டால்தான் உணர்ச்சிவசப்பட முடியும். அது வெளியுலகுடன் என்று மட்டுமல்லாது, தனது சுயகௌரவம் பற்றியதாகவும் ஆகலாம். சுயமரியாதை இழப்பதாக உணர்ச்சிவசப்படுவது அமையலாம்.

எண்ணங்களுடன் தொடர்பற்ற அல்லது பிணையவல்லாத நிலை என்பது உணர்ச்சிவசப்படாத / அதைக் கட்டுப்படுத்தும் நிலை. அதுவே ‘மனமற்ற நிலை’யென கருதவுள்ளது. எண்ணமற்றுவிட்ட நிலையன்று. எண்ணத்தை நிறுத்துவதான நினைப்பும் ஒரு எண்ணமே. எண்ணத்தை (மனதை) கடக்கவல்ல நிலையாக குறிப்பது பொருத்தமானதே.

உணர்ச்சி வசப்படும்போது உண்மை (தர்மம்) களங்கப்படுமாறு எண்ணங்கள் தொடரலாம். இழப்பு நேர்ந்து விடுவதன் காரணம் புரியாமல் மற்றவர்களை நொந்து கொள்வதாக மனம் எண்ணமாற்றலாம். விளையாடச் சென்ற பிள்ளை அழுதவாறு வீடு திரும்பினால், உண்மையை அறியாது மற்றப்பிள்ளைகளை குறைகூறும் பெற்றோரின் நிலை இது.

தர்மம் நிலைநாட்டப்பட உணர்ச்சிப் பெருக்கம் / வசப்படாதவாறு மனம் இயங்க வேண்டியது அவசியம். அந்நிலையில் இறைவன் செயல்படுவான் என்பது சத்தியம் கடைப்பிடிப்பதை வலியுறுத்துவது. எமது சிந்தனையை இறைவன் வழங்குவான் என்றல்ல.

‘சிந்தித்தால் சிரிக்க வேண்டியதாக பலரின் சிந்தனை அமைவது வருந்தத்தக்கது!’. ●



டாக்டர் ஸ்ரீதரன்

# குகை



இலங்கையிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட ஒரு முக்கிய கடிதத்தை பெற்றுக் கொள்வதற்காக- நானும் எனது நண்பனும் எமக்கு முன் அறிமுகமில்லாத- மின்சார பொறியியலாளர் மகேசன் வீட்டுக்கு கடந்த வாரம் சென்றிருந்தோம். இன்னும் ஐந்து நிமிடங்களில் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து திரும்பி விடுவார்-ஹாலில் அமருங்கள் என்று கூறி மறைகிறாள் அவரின் மனைவி. நம் கண்கள் ஹாலை ஒரு முறை வட்டமிடுகின்றன.

நான் அமர்ந்திருக்கும் ஸோபாவின் அருகேயுள்ள சிறிய மேசையின் மீது- சில தினங்களுக்கு முன் உணவருந்திய கோப்பையில் உள்ள மீதி உணவு உலர்ந்து- அதன் மீது பச்சை நிறத்தில் ஏதோ ஒன்று வளர்ந்து கொண்டிருக்கிறது.

மிகப் பெரிய- விலை உயர்ந்த டி.வி- பலவித பொருட்களையும் வைப்பதற்கு ஒரு உகந்த இடமாகத் தெரியப்பட்டிருக்கிறது- அதன் மீது ஒரு பிள்ளையார் சிலை- மிளகாய் பொடி டப்பா- பல் துலக்கும் பிரஷ்- பற்பசை- ஒரு சோற்றுக் கரண்டி- ஒரு கத்தி- என வெகு அலங்காரமாக காட்சியளிக்கிறது டி.வி. அதற்கு கீழே இருக்கும் வீடியோ உபகரணத்தினுள் ஒரு பாண் துண்டு செருகப்பட்டிருக்கிறது.

ஹாலையும் சமையலறையையும பிரிக்கும் கதவில் பொறியியலாளரின் ஒரு செட் உடுப்பு தொங்குகிறது- கசங்கி சுருண்ட சிவப்பு நிற ஜட்டி உட்பட.

ஹாலின் ஓரமாகவுள்ள பெரிய மேசை- இது எதற்காக உபயோகிக்கப்படுகிறது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! என்ற பேட்டிக்கு தயார்படுத்தப்பட்டது போல அதன் மீது சில பொருட்கள்: ஒரு கம்ப்யூட்டர்- பூந்தோட்டத்தில் வேலி கத்தரிக்க உபயோகிக்கும் நீண்ட கத்தரி ஒன்று- ஒரு சுத்தியல்- ஒரு நீண்ட வாள்- ஒரு பென்சில்- சில புத்தகங்கள். மேசைக்கு அருகேயுள்ள விலை உயர்ந்த நாற்காலியில் ஒரு நாய் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

ஹால் முழுவதும் ஒரு வகை அபூர்வ சுகந்தம். அது நாயின் மணமா- அல்லது சிகரட் புகையின் நாற்றமா- அல்லது சமையலறையிலிருந்து வரும் கருவாட்டு மணமா- அல்லது இவையெல்லாவற்றின் ஒரு அபூர்வ கலப்பா என்பது கண்டுபிடிக்க முடியாத ஒன்று.

பொறியியலாளர் சிறிது நேரத்திலேயே வீடு வந்து விட்டார். அவருடன் நாம் நடத்திய சிறு உரையாடலில் நாம் அறிந்து கொண்ட மிக முக்கிய விடயம்- வெகு விரைவில் அவர்கள் இந்த வீட்டை விற்று விட்டு வேறு இடத்திற்கு செல்கிறார்கள்-காரணம்- இந்த *Area* சரியில்லை.

வெளியே வந்த பின் நான் நண்பனிடம் கேட்ட முதல் கேள்வி:

ஏன் இவர்களின் வீடு காட்டு மிருகங்களின் குகையை போல இருக்கிறது?

இதற்கு நண்பனின் பதில்:

*Area* சரியில்லை- அதனால் தான் அவர்கள் *Area*விற்கு ஏற்ப வீட்டை வைத்திருக்கிறார்கள்!

கைலாயம் செல்வதால் ஒரு எருமை நந்தியாவதில்லை!

# பூரணம்



அன்று ஞாயிற்றுக்கிழமை. நேரம் காலை பத்து மணி. கடந்த பதினைந்து வருடங்களாக இலண்டனில் வாழும்- டாக்டர் ரவியும் அவரது மனைவி அகிலாவும்- வழமை போல அவர்களின் மகள் அபிராமியை வீணை வகுப்பிற்கும் மகன் பிரகலாதனை மிருதங்க வகுப்பிற்கும் அழைத்துச் செல்ல தயாராகிறார்கள். தனது பிள்ளைகள் இலண்டனில் வாழ்ந்தாலும் அவர்கள் இந்திய கலாச்சாரத்துடன் தான் வளர வேண்டும் என்பது டாக்டரின் பிடிவாதம். வீட்டை பூட்டிய பின்- மனைவியையும் பிள்ளைகளையும் காரில் ஏற்றி விட்டு- நேற்றைய பத்திரிகையையும் வேறு சில தேவையற்ற பொருட்களையும் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு காரில் ஏறுகிறார் டாக்டர்.

வீசிய அந்தப் பத்திரிகையில் டாக்டர் படிக்க தவறிய பக்கம் ஒரு சமூகவியல் கட்டுரை. அதன் சாராம்சம்:

கலாச்சாரம் என்பது ஒரு மன அமைப்பு- அது ஒரு சிந்தனை முறை. பிறந்த இனம்- பேசும் மொழி- கற்ற கல்வி- வாழும் சூழல்- இப்படி எத்தனையோ காரணிகள் சேர்ந்து உருவாக்கும்- பார்வைக்கு தெரியாத மிக சிக்கலான ஒரு முழுமை அது. நமது வெளிப்பார்வைக்கு தெரியும் கலாச்சாரச் சின்னங்கள் என்பவை ஒரு கலாச்சாரத்தின் வெளிப்பாடுகள்- அதன் பிரதிபலிப்புகள். பெண்கள் அச்சம்-மடம்-நாணம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்பது ஒரு சிந்தனை முறை. சேலை-பூ-பொட்டு- அவற்றை பிரதிபலிக்கும் சின்னங்கள். உடலை- உள்ளத்தை கடந்து- அந்த உயிரை உருக வைப்பது சங்கீதம் என்பது ஒரு சிந்தனை முறை. சங்கராபரணம்- மோகனம்-காம்போதி- அவற்றின் பிரதிபலிப்புகள்.

சிந்தனை இல்லாதபோது சின்னங்கள் அர்த்தமற்ற வெறும் வேஷங்கள். சின்னங்களைச் சூடிக் கொள்வதால் சிந்தனை முறை மாறுவதில்லை.

வேட்டி அணிவதால் ஒரு பீட்டர் சுப்பிரமணியாகி விடுவதில்லை! ஒரு அன்ஜலாவை அகிலாவாக்குவதற்கு சேலை மட்டும் போதாது! கூந்தலில் பூ சூடுவதால் மேரியும் சாவித்திரியும் ஒன்றல்ல! சங்கராபரணம் பாடுவதால் மைக்கல் ஜாக்ஸன் யேசுதாஸ் ஆகி விடுவதில்லை! காசிக்கு செல்வதால் போப்பாண்டவர் சங்கராச்சாரியார் ஆகிவிடுவதில்லை!

அப்படியானால்- டாக்டரின் பிள்ளைகள்- வீணை படிக்கும் அபிராமியும் மிருதங்கம் படிக்கும் பிரகலாதனும் தமது நண்பர்களை தனியாகச் சந்திக்கும் போது பேச விரும்பும் விடயங்கள்- ஆங்கில சினிமா- தொலைக்காட்சி நாடகம்- கவர்ச்சி நடிக நடிகையர்- நாகரீக உடை அலங்காரங்கள்!

பேச விரும்பாத விடயங்கள்- சங்கராபரணம்- ஆதி தாளம்- மகாபாரதம்!

இன்று இவர்கள்- பிரகலாதன் என்ற பெயரில் மிருதங்கம் பயிலும் பீட்டர்கள்!

நாளை இவர்கள்- அபிராமி என்ற பெயரில் உலாவப் போகும் வீணை கற்ற அன்ஜலாக்கள்.

பூரணத்திற்கு தேவையா பூர்வீகம்?

# ஊனம்

பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவனின் பத்தினிக்கு தனது கணவனின் சிருஷ்டியில் உருவாகிய அதி சிறந்த முட்டாளை காண வேண்டும் என்று நீண்ட நாளாக ஒரு ஆசை. காட்டுகிறேன் வா அந்த வடி கட்டிய முட்டாளை என்று மனைவியை அழைத்துச் செல்கிறார் கணவன்- நோபல் பரிசு பெற்ற- இப்படி ஒரு விஞ்ஞானியை கண்டதில்லை இந்த உலகம் இது வரை- என்று மக்கள் போற்றும் அதி சிறந்த விஞ்ஞானியின் வீட்டிற்கு. வெகு தீவிரமாக எதையோ படித்துக் கொண்டிருந்த விஞ்ஞானியின் எதிரே உள்ள மேசை மீது அமர்கிறார்கள் தம்பதிகள்.

“நாதா! நாங்கள் வந்திருப்பதை இவர் கவனித்ததாக தெரியவில்லையே!”

“உண்மை தான் தேவி! நான் சிருஷ்டித்த பிரபஞ்சத்தில் நடக்கும் எத்தனையோ விடயங்களை மனிதக் கண்களால் பார்க்க முடியாது!”

“நாங்கள் பேசுவதையாவது இவரால் கேட்க முடியுமா?”

“முடியாது! சில விலங்குகளுக்கு இருக்கும் கேட்கும் சக்தி கூட மனிதச் செவிகளுக்கு கிடையாது.”

“நான் இவரைத் தொட்டுப் பார்க்கட்டுமா?”

“தாராளமாக தொடு. ஆனால், மனித நரம்பு மண்டலத்திற்கு அதை உணரும் சக்தி இல்லை!”

“நாதா! எதற்காக இவரின் வீட்டில் கதவுகள் இருக்கின்றன?”

“மனித உடல் ஒரு திண்மம். அவர்களால் சுவர்களை ஊடுருவ முடியாது- கதவின் ஊடாகவே செல்ல முடியும்!”

“நாதா! இவரின் பின்னால் ஒரு கரிய உருவம் நிற்கிறதே! அது யார்?”



“என்ன இது தேவி? பூலோகத்திற்கு வந்தபின் உன் கண் பார்வையும் கெட்டு விட்டது. அது தான் யமன். இவரது உயிரை நாளை எடுப்பதற்காக இன்றே வந்து காத்திருக்கிறான்.”

“நாதா! கடைசியாக ஒரு கேள்வி. இவர் என்ன ஆராய்ச்சி செய்கிறார்?”

“இந்த பிரபஞ்சம் எப்பொழுது தோன்றியது- ஏன் தோன்றியது- எப்படி இயங்குகிறது- எப்பொழுது ஒரு முடிவுக்கு வரும்- என்பவற்றை அறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்!”

தன் நெடு நாளைய ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியில் தேவி பாடுகிறாள்:

“அரகர சிவ சிவ சம்பு! இந்த பாழும் விஞ்ஞானிக்கு ஏன் இந்த வம்பு!”



# இஸ்லாமைத் தழுவிய ரஹ்மான் எப்படி பிரபலமானார்?

'இசைப்புயல்' ஏ.ஆர். ரஹ்மானின் 53-ஆவது பிறந்த நாள் சமீபத்தில்.

திலீப் குமார் என்ற பெயரோடு சைவ மதத்தவராகப் பிறந்தவர், தனது 23-ஆவது வயதில் இஸ்லாம் மதத்தைத் தழுவினார் ரஹ்மான். இவரின் அப்பா ஆர்.கே. சேகர், மலையாளத் திரைத் துறையில் 50 படங்களுக்கு மேல் இசையமைத்தவர். ரஹ்மானின் 9 வயதில் அவரின் தந்தை மரணமடைந்தார்.

சிறுவயதில் தூர்தர்ஷன் சேனலில் ஒளிபரப்பான 'வொன்டர் பலூன்' என்ற நிகழ்ச்சியில் ஒரே நேரத்தில் 4 கீ போர்டுகளை வாசித்து மக்கள் மத்தியில் கவனம் பெற ஆரம்பித்தார் ரஹ்மான்.

கம்ப்யூட்டர் இன்ஜினீயர் ஆக வேண்டுமென்பதுதான் ரஹ்மானின் சிறுவயதுக் கனவாக இருந்தது. ஆனால், இசைத்துறையில் ஈடுபாடுகொண்ட காரணத்தால், 15 வயதிலேயே பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டார் ரஹ்மான். இசைக் கச்சேரிகளில் தனித்துவத்தோடு வாசித்த காரணத்தால், உதவித் தொகை பெற்று ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் டிரினிட்டி கல்லூரியில், 'வெஸ்டர்ன் கிளாசிக்கல் மியூசிக்'கில் பட்டமும் பெற்றார்.

இளம் வயதிலேயே இளையராஜாவின் இசைக் குழுவில் கீ போர்டு வாசிக்கத் தொடங்கினார். பின்னர் எம்.எஸ். விஸ்வநாதன், குன்னக்குடி வைத்தியநாதன், ரமேஷ் நாயுடு உள்ளிட்ட கலைஞர்களோடும் பணியாற்றினார். திரைத்துறையில் முழுமையாகக் களமிறங்குவதற்கு முன் விளம்பரப் படங்களுக்கு இசையமைத்து சம்பாதித்து வந்தார் ரஹ்மான்.

ரஹ்மான் முதன்முதலாக இசையமைத்தது மலையாளத்தில் மோகன்லால் நடிப்பில் வெளியான 'யோதா' என்ற திரைப்படத்துக்குத்தான். ஆனால், 'யோதா'வுக்கு முன்பே 'ரோஜா' வெளியானதால், ரஹ்மானின் முதல் திரைப்படமானது அது.

சிறுவயதில் 'ரெக்கார்ட் ப்ளேயரை' இயக்கியதற்காக 50 ரூபாயை முதல் சம்பளமாகப் பெற்றார் ரஹ்மான். தான் இசையமைத்து வெளியான முதல் படமான 'ரோஜா'வுக்கு ரஹ்மான் பெற்ற சம்பளத் தொகை 25,000 ரூபாய்.

'ரோஜா' படத்தின் பாடல்கள் மிகப் பெரிய ஹிட் அடித்தது. அதுவரை இல்லாத அளவுக்கு 2 இலட்சத்துக்கும் அதிகமான கேசட்டுகள் விற்றுத் தீர்ந்தன.

ரஹ்மான், சிந்து பைரவி ராகத்தில் உள்ள பாடல்களைத்தான் அதிகம் விரும்பிக் கேட்பாராம். அதுமட்டுமல்லாமல் இசையமைப்பதற்கு இரவு நேரங்கள்தான் ரஹ்மானுக்குப் பிடிக்கும்.

ரஹ்மானுக்கு ஆஸ்கர் பெற்றுத்தந்த 'ஜெய் ஹோ' பாடல், முதலில் சல்மான்கான் நடிப்பில் வெளியான 'யுவ்ராஜ்' படத்துக்காக இசையமைக்கப்பட்டது. அந்தப் படத்தில் பயன்படுத்தவில்லை என்ற காரணத்தால் 'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்தில் பயன்படுத்தப்பட்டது.

ஒரே ஆண்டில் இரண்டு ஆஸ்கர் விருதுகளை வென்ற ஒரே ஆசியக் கலைஞன் ரஹ்மான் மட்டுமே. அதேபோல 1992 முதல் 2001-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 9 ஆண்டுகள் 'தென்னிந்திய ஃபிலம் பேர்' விருதுகளை வென்ற பெருமையும் ரஹ்மானுக்கே இருக்கிறது. தான் இசையமைத்து, வெளியான முதல் படத்துக்கே (ரோஜா) தேசிய விருது பெற்ற முதல் இசையமைப்பாளரும் ரஹ்மான்தான்.

தந்தையைப் போல் இளம் வயதிலேயே இசையமைப்பதில் ஆர்வம் காட்டி வரும் ரஹ்மானின் மகன் ஏ.ஆர். ஆமீனுக்கு ரஹ்மான் பிறந்த தேதியான ஜனவரி 6-ஆம் தேதிதான் பிறந்த நாள்.

2009-ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த ஒபாமா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை வெள்ளை மாளிகையில் சந்தித்தார். அப்போது இரவு உணவுக்கு முன்பாக ரஹ்மானின் இசைக் கச்சேரி நடந்தது. வெள்ளை மாளிகையில் இசைக் கச்சேரி நடத்திய முதல் இந்தியக் கலைஞரானார் ரஹ்மான். அதன் பிறகு, 2012-ஆம் ஆண்டு ட்விட்டரில், 'டியர் Mr & Mrs. ஒபாமா, மீண்டும் எனக்குக் கிறிஸ்துமஸ் மற்றும் நியூ இயர்க்கான வாழ்த்து அட்டை அனுப்பியதற்கு நன்றி. நீங்கள் மீண்டும் இந்தியாவுக்கு வரவேண்டும். பரோடாவில் ஜனவரி 26 நடைபெறவுள்ள என் இசைக் கச்சேரியில் கலந்து கொள்ள வேண்டும்' என்று பதிவிட்டிருந்தார், ரஹ்மான்.

திரையுலகில் 27 வருடங்களுக்கும் மேலாக இசையமைப்பாளராக வலம்வரும் ரஹ்மான் முதன்முதலாக வெள்ளித்திரையில் முகம் காட்டியது என்றால் அது கடந்த ஆண்டு வெளியான 'பிகில்' படப் பாடலில்தான். சிங்கப் பெண்ணே பாடலில் விஜய், ரஹ்மான், அட்லி மூவரும் தோன்றினர்.






## தமிழ்படவுலகின் பரிதாபம்!

குறுக்கு வழியில் கவர்ச்சி காட்டி தமிழ் சினிமாவுக்குள் நுழைந்துவிட வேண்டுமென்று 'கண்ட' மாதிரி எல்லாம் தம்மைப் படம் பிடித்து, அதனை வெளியிடுவதை தமது வேலையாகக் கொண்டுள்ளார்கள். 'முரட்டுக் குத்து' என்ற பெயரோடு தொடங்கப்படும் படத்தில் நாயகியாக நடித்த இளசு யாஷிகா ஆனந்த். இப்படியான படங்களை தயாரிப்பாளர் கண்களில் படும்படியாக எடுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். அந்தளவுக்குத் தமிழ்படவுலகமும் மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

## மோசம் செய்த முருகதாஸ்! பாவம், நயன்தாரா!

ரஜினி நடித்த 'தர்பார்' படத்தில் தன்னை ஒரு 'டம்மி'யாக இயக்குநர் முருகதாஸ் பாவித்திருப்பதாக ஆத்திரத்தைக் கொட்டி வருகிறார் நயன்தாரா. ரஜினியின் மகளாக நடித்துள்ள நிவேதாவுக்கு அளித்துள்ள முக்கியத்துவம் கூடத் தனக்கு அளிக்கப்படவில்லை என்று நெருக்கமானவர்களிடம் நயன் புலம்பியுள்ளார்.

லேடி சூப்பர் ஸ்டார் இப்படி ஒரு உப்புச் சப்பில்லாத படத்தில் இப்படி தன் அர்த்தமில்லாத பாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்று ரசிகர்கள் கோபத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர். சும்மா வந்து போகிறாராம்.





## சிவகார்த்திகேயனின் இனிய பொங்கல்!

தமிழ் படவுலகில் இவரது வளர்ச்சி 'ரொக்கட்' வேகத்தைத் தாண்டிவிட்டது. தொலைக்காட்சி தொகுப்பாளராக இருந்து, சினிமாவுக்குள் நுழைந்த இவர் இன்று பெரிய ஸ்டாராகிவிட்டார். சமீபத்தில் தைப்பொங்கல் தினத்தை சிவகார்த்திகேயன் தன் மனைவி மகளுடன் மகிழ்வாகக் கொண்டாடினார்.

வவுனியூர் இரா.உதயணன்



# நேர்கோடுகள் முறியும் போது...

கதிரவன் மறைந்து பல மணி நேரம் ஆகிவிட்டது. மெல்லிய பனி மூட்டம் ஆங்காங்கே பரவி இருக்க கோகிலா சாளரத்தின் ஊடாக வெளியே பார்த்தாள். சந்திரன் வானத்திலிருந்து முழு உடலைக் காட்டி அவளைப் பார்த்துச் சிரித்தது. ஆனால் கோகிலாவின் மனமோ நிம்மதி இல்லாமல் தவித்துக்கொண்டிருந்தது.

கணவன் ரஜீவ் இரவு வேலைக்குப் போய்விட்டதால் இனிக் காலை எட்டு மணிக்குத்தான் வீடு வந்து சேர்வார். ரஜீவுக்கு இரவும் பகலுமாக ஒவ்வொரு கிழமையும் மாறி மாறி வேலை வரும். இந்த வாரம் முழுவதும் இரவு வேலைதான்.

நேரமோ விடியக்காலை ஒரு மணியைத் தாண்டி இருந்தது. அவளது பிளாட்டில் இருந்த சாளரத்தின் ஊடாக வெளியே பார்த்தால் விரைந்து செல்லும் வாகனங்களும் நடந்து செல்லும் மனிதர்களையும் நன்றாகவே தெரியும்.

ஆனால் இப்போ அவள் பார்க்கும் இந்த நிமிசம் தெருவெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. பச்சை மஞ்சள் சிவப்புக்கொண்ட டிராபிக் சிக்னல் மாத்திரம் தனது நிறத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்தது. மெல்லிய பனி மூட்டத்தில் நிறங்கள் மாறுவது மாத்திரம் அவளது கண்களில் பளிச்சென்று தெரிந்தது.

ஒரிரு மனிதர்கள் கடும் குளிரைத் தாங்கும் ஜக்கட்டும், தொப்பியும் போட்டு நடந்து செல்வதை அவளால் அவதானிக்க முடிந்தது. அவர்களில் ஒருவனாக மனோவும் இருக்கமாட்டானா என கோகிலாவின் மனம் தவித்துக்கொண்டிருந்தது.

மனோ வேறு யாரும் இல்லை. கோகிலாவின் ஒரே மகன் தான். தந்தை ரஜீவ் இரவு வேலை செய்யும் நாட்களில் மனோ நேரத்திற்கு வீட்டிற்கு வருவதில்லை. அவன் வீடு வந்து சேர இரவு பன்னிரெண்டு மணியோ அல்லது அதற்கு மேலோ ஆகிவிடும்.

மனோ அண்மையில்தான் அட்வாண்ஸ் லெவல் பரீட்சை எழுதிவிட்டு முடிவுகளுக்காக காத்திருக்கிறான். ஓலெவல் வரை நன்றாகப் படித்த மனோவின் படிப்பு அவன் அட்வாண்ஸ் லெவல் படிக்கத் தொடங்கியதும் ஆட்டம் காணத் தொடங்கியது.

ஒருநாள் கோகிலா ரஜீவ் பகல் வேலை முடிந்து வந்தபோது மனோவின் படிப்பைப் பற்றியும் அவன் படிப்பில் கவனம் செலுத்துவது குறைந்துகொண்டு போவது பற்றியும் கவலையோடு சொன்னாள்.

ரஜீவ் ஒரு கணம் சிரித்துக்கொண்டு கோகிலாவைப் பார்தான்.

“ரீனேச் கோகிலா” என்று சொல்லிக்கொண்டு காலில் போட்டிருந்த சப்பாத்தின் லேசை அவிழ்த்தான் ரஜீவ். கோகிலாவுக்கு கோபம் பத்திக்கொண்டு வந்தது. “நான் மனோவின் படிப்பைப் பற்றிக் கதைக்கிறன். நீங்கள் அவனின்ர ரீன்ஏச்சைப் பற்றிக் கதைக்கிறியள்” என்று கத்தினாள்.

அதற்கும் ரஜீவ் சில கணங்கள் பதில் சொல்லாமல் கோகிலாவையே பார்த்தான். இன்னமும் புன்சிரிப்பு அவன் முகத்தைவிட்டு விலகவில்லை. “நாங்கள் ஊரில இருக்கேக்க அதுவும் அடவாண்ஸ் லெவல் படிக்கேக்க எத்தனை குளறுபடிகள் செய்தனாங்கள். அந்தக் காலத்தில நாங்கள் வளர்ந்த மாதிரியே இங்க பிள்ளைகள் வளருதகள். எங்களுக்கு எவ்வளவு சுதந்திரம் இருந்தது. இங்க வீட்டுக்க அடைபட்டுக் கிடந்து கொம்பியூட்டரில் கேம்ஸ் விளையாடுவதுதானே அதுகளுக்குப் பொழுதுபோக்கு.”

கோகிலா ரஜீவைக் கோபத்துடன் பார்த்தாள். “என்னப்பா சொல்லிறீயள், இங்கதான் எத்தனையோ பிள்ளைகள் மிருதங்கம் சங்கீதம் கராட்டி என்றெல்லாம் படிக்கப் போகுதுகள். அந்தப் பிள்ளைகள் எல்லாம் படிப்புத் தவிர்ந்த மற்ற நேரத்தையெல்லாம் நல்ல விதத்தில்தானே செலவழிக்குதுகள்.”

“அப்ப மனோ தன்ர நேரத்தை நல்ல விதத்தில் செலவழிக்கேல்லை என்று சொல்ல வாறியோ”

கோகிலா ஒன்றும் சொல்லாமல் றஜீவையே பார்த்தாள். கோகிலா அவன் பெடியன் நாலு இடத்தில் அடிபட்டு வந்தால்தான் அனுபவம் உள்ள ஒரு நல்ல ஆண் மகனாக நிமிர்ந்து நிற்பான். இதுதான் அந்த அனுபவங்களைப் பெறும் வயது. அவன் பல்கலைக்கழகம் போய்விட்டால் என்ன செய்யப்போறாய். அங்கேயே மாணவர் விடுதியில் தங்கியிருந்த படிக்க வேணும். அப்பவும் ஒவ்வொரு நாளும் அவனைப் பற்றி யோசித்துக்கொண்டிருப்பியே. பெடியன் எல்லாம் அனுபவித்து வாழ வேண்டிய வயது.

கோகிலாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. இரண்டு கிழமைக்கு முன்பு நடந்து முடிந்த சம்பவங்களை றஜீவுக்குச் சொல்வதா விடுவதா என்று நினைத்துக்கொண்டு றஜீவையே பார்த்தாள்.

இவருக்குச் சொல்லப் பிறகு இந்த மனிசன் அவனில கையை வைக்க பிறகெல்லாம் பிரச்சனையாகப் போய்விடும். வாயை மூடிக்கொண்டு இருப்பதுதான் நல்லது என்று நினைத்தவளாய் கோலிலிருந்து மெல்லச் சமையலறைப் பக்கமாக விலகிப் போனாள்.

நேரம் இரண்டு மணியைத் தாண்டி இருந்தது. விழித்திருந்து கண்கள் சிவந்துவிட்ட நிலையில் மீண்டும் கட்டிலில் இருந்து எழும்பி சாளரத்தின் ஊடாக வெளியே பார்த்தாள். கண்ணுக்கு எட்டும் தூரம்வரை கண்வெட்டாமல்ப் பார்த்தாள். றோட்டில் யாரும் நடந்து போய்வருவதாகத் தெரியவில்லை.

மெல்லச் சென்று கட்டிலில் அமர்ந்துகொண்டாள். ரஜீவுக்கு மனோவின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி சொல்லியிருக்க வேணும். நான் பிழை விட்டுட்டன். ஒருமுறை குடிச்சுப்போட்டு வெறியோட வந்திருந்தால் பரவாயில்லை. இப்ப ஆறு முறை இப்படிக் குடித்துப்போட்டு தள்ளாடி தள்ளாடி விடியிற நேரத்தில் வீட்டுக்கு வந்து இங்கிலீசில் கூடாத வார்த்தைகளால் திட்டினதையெல்லாம் ஒரே மகன் என்று பொறுத்துக்கொண்டன். இனியும் மறைக்காமல் மனுசன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பிறகு நேரம் பார்த்துச் சொல்ல வேணும். அதோட மனுசனை இரவு வேலையை விட்டுவிடச் சொல்லவும் வேணும்.

மனம் படபடத்துக்கொண்டது. கோகிலா அறையின் வெளிச்சத்தை அருகில் சுவரில் இருந்த சுவிச்சை அமத்தி நிற்பாட்டிவிட்டு அங்கும் இங்குமாக நடந்தாள்.

நானும் இவரும் மனோவைச் சரியான வழியில் வளர்க்கவில்லையோ என்ற கேள்வி எழ கண்களில் நீர் முட்டியது.

றஜீவ் எந்த ஒரு விடயத்தையும் பெரிதாக எடுக்க மாட்டார். நான் அவரிட்ட மனோவின் குடியைப் பற்றிச் சொல்லியிருந்தால் ஒன்றில் பெரிய பிரச்சனையாக இருக்கும் இல்லாவிட்டால் பெடியன் இப்படித்தான். போகப்பேக சரியாகிவிடும் என்று அவனுக்கு பரிந்து பேசியிருப்பார்.

சின்ன வயசில இருந்து புத்தி சொல்லி சொல்லி வளர்த்திருக்க வேணும். அந்த நேரத்தில நானும் இவரும் வேலைக்குப் போனதால் மனோவின்ர படிப்பில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. பிறகு பத்தாம் வகுப்பு படிக்கேக்க பாடசாலைக்கு போகேக்க இரண்டு பஸ் எடுத்துத்தான் விட்ட வாரவன். அதோட நாங்கள் இரண்டு பேரும் வேலை முடிந்து ஏழு மணிக்கு வீட்டுக்க வரும்வரை தனியாகத்தான் இருப்பான். ஆனால் நாங்கள் வரேக்க படித்துக்கொண்டுதான் இருப்பான்.

விடியக்காலை 5 மணியை கடிகார முட்கள் நெருங்கிக்கொண்டு இருந்தன. பலமுறை கோகிலா மனோவின் தொலைபேசிக்கு அழைத்துப் பார்த்துவிட்டாள் ஒரு பதிலும் இல்லை. “சனியன் குடிச்சுப்போட்டு எங்கேயும் விழுந்து கிடக்குதோ தெரியாது.” மனம் பலவிதமாக சிந்திக்கத் தூண்டியது.

கோகிலாவின் கண்கள் நித்திரையற்று உடலும் மனமும் சோர்வடைந்த நிலையில் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

நன்றாக விடிந்து காலை எட்டுமணியைத் தாண்டியிருந்தது. அப்போது ஒரு போலிஸ் கார் கோகிலா வசித்த பிளாட்டுக்கு முன்னால் வந்து நிற்பதை சாளரத்தின் ஊடாக கோகிலா கண்டுவிட்டாள். அதில் பின் சீற்றில் இருவர் இருப்பதையும் அவளால் காண முடிந்தது. படிகளில் இறங்கி கீழே ஓடினாள். அப்போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் முன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். காருக்குள் எட்டிப் பார்த்தாள். மனோவின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு அமர்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் இன்னொருவன் மனோவைக் கண்டதும் கோகிலா காருக்கருகில் சென்று அவனைப் பார்த்து அழுதாள். றஜீவும் அந்த நேரம் பார்த்து வேலை முடிந்து வந்துகொண்டிருந்தான். கோகிலா கீழே நின்று அழுவதைப் பார்த்ததும் ரஜீவ் கோகிலாவிடம் ஓடிச்




சென்றார். பொலிஸ் காரில் இருந்து இறங்கிய உத்தியோகத்தர் கோகிலாவைப் பார்த்து “இவர் உங்களுக்கு என்ன முறை என்று கேட்க, என்ர மகன”; என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னாள். கோகிலா இருவரம் பேசிக்கொண்டிருக்க ஓடி வந்த றஜீவ் “என்ன நடந்தது கோகிலா” என்று கேட்க

கோகிலா பொலிஸ் காரின் பின்பக்கம் கையை நீட்டிக் காட்டினாள்.

“திஸ் இஸ் மை சண்” என்று ஆங்கிலத்தில் ரஜீவ் பொலிஸ் உத்தியொகத்தரைப் பார்த்துச் சொல்ல.

சில நிமிடங்கள் ஒன்றும் சொல்லாமல் பொலிஸ் உத்தியோகத்தர் இருவரையும் பார்த்தார். பின்பு “உங்கட மகன் ஜக்கட் பொக்கட்டில போதைப்பொருளும் பின் முதுகுப்புறத்தில பெரிய கத்தியும் செருகி வைத்திருந்தான். போதைப்பொருள் கடத்துவது எந்தளவு பெரிய குற்றம் தெரியுமா? ஏன்று அங்கிலத்தில் சொல்லிவிட்டு கோகிலாவையும் றஜீவையும் பொலிஸ் ஸ்டேசனுக்கு வருமாறு பணித்துவிட்டு காரை எடுத்தார்.

கோகிலா ஓவென்று அழத்தொடங்கிவிட்டாள். றஜீவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கோகிலாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டார்.

பொலீஸ்கார் கண்களிலிருந்து மறையும் வரை றஜீவின் கண்கள் அங்கேயே பார்த்து நின்றது.

மாறி வருகின்ற சமுதாயத்தில் பிள்ளைகள் தப்பான பக்கம் திரும்பிவிட்டால் நேர்கோடுகளும் முறிந்துவிடும்.

இந்தப் பிள்ளைகளை பேணிப்பாதுகாத்து நல்வழியில் எடுத்துச் செல்வது பெற்றோரின் கடமை. பணம் பணம் என்று அலைந்து பிள்ளைகளின் வாழ்க்கை தவறான பாதையில் திசைமாறிப் போனால் பிள்ளைகளுக்காக வாழ்வது என்று சொல்வதில் அர்த்தமில்லை. ●





# சிவன் நற்பணி மன்ற சிறப்பான பொங்கல் விழா

இலண்டன் சிவன் நற்பணி மன்றத்தின் இரண்டாவது ஆண்டாக சமீபத்தில் இலண்டன் சிவன் ஆலய மண்டபத்தில் மண்டபம் நிறைந்த மக்களுடன் பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலண்டன் ஆலயத்துக்குத் தொண்டு செய்வதையும், தாயகத்தில் கஷ்டப்படும் நம் உறவுகளுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டு இயங்கும் நற்பணி மன்றத்தினர் ஆலயத்தின் முற்றத்தில் பொங்கி ஊரை நினைவுபடுத்தினார்கள். தமிழர்களின் கலாச்சார பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையோடு செயல்படுகிறார்கள்.







# மகாஜனாவின் புதிய நிர்வாகிகள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவாகியுள்ளனர். 2020–21ம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் தைமாதம் 12ம் திகதி நியூமொல்டனில் நடைபெற்றது.

தலைவராக திரு வீ தவமுருகநாதன் மீண்டும் தெரிவானார், செயலாளராக திரு குமரன் தணிகாசலமும் பொருளாளராக திருமதி தேம்பாமலர் சூரியநாராயணனும் புதிதாக தெரிவாகினர். புதிய நிர்வாகக்குழுவில் புல புதியவர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மகாஜன பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவராக சங்கத்தை உருவாக்கியவரும் முன்னாள் தலைவருமான திரு நா சிறிகெங்காதரன் தெரிவானார்.

தெரிவுகள் அனைத்தும் போட்டியின்றி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அரச பதவிகளைத் துறக்கும் இளவரசர் குடும்பம் கனடாவில்!



அரச பட்டங்களைத் துறக்கும் பிரிட்டிஷ் இளவரசர் ஹரி கனடாவில் தனது மனைவி, மகனைச் சென்றடைந்து குடும்பத்துடன் இணைந்தார்.

இங்கிலாந்து இளவரசர் ஹரி, மேகன் தம்பதியர் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பதவிகளைத் துறக்கின்றனர். இதையொட்டி இங்கிலாந்து ராணி 2–ஆம் எலிசபெத் சமீபத்தில் அரச குடும்பத்தின் உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து ராணி, ஹரி–மேகன் முடிவுக்கு ஒப்புதல் அளித்தார்.

வரும் வசந்த காலத்தில் (மார்ச்–சூன்) ஹரி–மேகன் தம்பதி அரச பட்டங்களைத் துறக்கின்றனர். அவர்கள் பொது மக்கள் வரிப்பணத்தை எதற்கும் பெறமாட்டார்கள். வின்சர் கோட்டை அருகே உள்ள தமது இல்லத்தைப் புதுப்பிப்பதற்கு ஹரி மக்கள் வரிப் பணத்திலிருந்து பெற்ற தொகையைத் திரும்ப அளித்துவிடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ராணி எலிசபெத்தின் பிரதிநிதியாக எந்த ஒரு விழாவிலும் இளவரசர் ஹரி இனி பங்கேற்க முடியாது. அரச குடும்ப கடமைகள் எதையும் செய்யவுமாட்டார்.

இளவரசி ஹரியின் மனைவி மேகனும், பிறந்து 8 மாதமேயான மகன் ஆர்ச்சியும் கனடாவின் வான்கூவர் தீவில் இருந்து வருகின்றனர். இப்போது ஹரியும் அங்கு கனடா வான்கூவர் போய்ச் சேர்ந்துள்ளார். இங்கு சில காலம் இருப்பார்கள். முன்னதாக, கனடா வருவதற்கு முன்னர் இளவரசர் ஹரி, இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சனைச் சந்தித்துப் பேசினார். இங்கிலாந்து – ஆப்ரிக்கா உச்சி மாநாட்டிலும் பங்கேற்றுப் பேசினார். இது அவர் இங்கிலாந்து இளவரசர் என்ற தகுதியில் இறுதியாகப் பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

அறக்கட்டளை விருந்து நிகழ்ச்சி ஒன்றிலும் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். அரச குடும்ப கடமைகளைத் துறப்பதைத் தவிரத் தனக்கு வேறு வழி எதுவும் இல்லை எனவும் உருக்கமாகக் குறிப்பிட்டார்.

# கிட்டு, 10 போராளிகள் வீரவணக்க நிகழ்வு







தமிழீழம் நோக்கி எம்.வி அகத் எனும் கப்பலில் பயணித்த வேளை வங்கக்கடலில் இந்திய அரசின் நயவஞ்சக சதியினால் 16.01.1993 அன்று வங்கக்கடலிலே தீயுடன் சங்கமித்த கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளின் 27ம் ஆண்டு வீரவணக்க நிகழ்வானது பிரித்தானிய மண்ணில் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்க பட்டது.

தாய்மண்ணின் நினைவுடன் வங்கத்திலே தீயுடன் சங்கமித்த வேங்கைகள்...

கேணல் கிட்டு, லெப்.கேணல் குட்டிசிறி, மேஜர். வேலன், மலரவன் கடற்புலி கப்டன் குணசீலன் குணராஜ், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி லெப். தூயவன், கடற்புலி லெப். நல்லவன், கடற்புலி லெப். அமுதன் இன்றய நிகழ்வில் கிருஷ்னராஜ் வியஜராணி பொதுசுடரினை எற்றிவைத்தார்.

தமிழர் ஒருங்கிணைப்பு குழு வெளியீட்டு பிரிவு பொறுப்பாளர் திரு தாஷன் தமிழீழ தேசிய கொடியினை எற்றிவைத்தார். ஈகை சுடரினை மன்னார் அரசியல் துறை பொறுப்பாளராக பணியற்றிய திரு சுரேஷ் அவர்கள் எற்றி வைத்தார்.

திருவுருவத்திற்க்கான மலர் மாலையினை ஷர்மினி கண்ணன் மற்றும் சுஜித்தா ஆனந்த் அணிவித்ததை தொடர்ந்து பொதுமக்கள் சுடர் வணக்கம் மற்றும் மலர்வணக்கத்தினை செலுத்தினார்கள்.







# சைவ முன்னேற்றச் சங்கம் தமிழருவிக்கு 'சிவத்தமிழ் சுரபி' பட்டம்

லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஈஸ்ற்ஹாம் சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் மார்கழி திருவாதிரை உற்சவத்தில், தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த பிரவல ஆன்மீகச் சொற்பொழிவாளர் தமிழருவி சிவகுமாரன் பன்னிருநாட்கள் மனதை உருகவைக்கும் பதினாறு தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். கடந்த 1ம் திகதி ஆரம்பமான உற்வத்தின் 12ம் நாள், ஈழத்து வாரியார் இலக்கியத் தென்றல், தமிழறிஞர் என்றெல்லாம் அறுபதுக்கு மேற்பட்ட பட்டங்களைச் சுமக்கும் 'தமிழருவி'க்கு சைவ முன்னேற்றச் சங்கமும் 'சிவத்தமிழ் சுரபி' என்ற பட்டமளித்துக் கௌரவித்தது.

பிரித்தானய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் முதலாவது உலகச் சைவ மாநாட்டில் 1998ம் ஆண்டு கலந்து கொண்டதுடன், தொடர்ந்து எட்டு சைவ மாநாட்டில் இங்கு கலந்து கொண்டிருக்கிறார். லண்டனில் பல்வேறு ஆலயங்களிலும், அமைப்புகளிலும் கடந்து ஆண்டுகளில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அன்பை நிறைவாகப் பெற்றிருக்கிறார்.

வவுனியா தமிழ் தேசியக் கல்லூரி, வவுனியா மகளிர் தமிழ் தேசியக்கல்லூரி ஆகியவற்றில் 35 ஆண்டுகள் ஆசிரியத் தொழில் புரிந்து வருகிறார். கடந்த 25ம் திகதி குறொய்டனில் முத்தமிழ் விழாவில் 'நாமும் தமிழும்' எனும் பொருளில் சிறப்பான உரை ஆற்றினார். காரைநகர் இவர் பிறப்பிடம். சுழிபுரம் விக்டோரியா, யாழ் இந்து கல்லூரி, பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுத் தேறியவர்.





லண்டனில் தனது சொற்பொழிவுகளை முடித்துக் கொண்டு, கடந்த 29ம் திகதி சுவிற்சர்லாந்து, ஜெர்மனி, ஹொலண்ட் ஆகிய நாடுகளில் புலம் பெயர் தமிழர்களின் அழைப்பை ஏற்று அங்கு ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார்.

"புலம் பெயர் தமிழ் மக்களின் தாயகப் பற்றும், மொழித் தாகமும், ஆன்மீக வேட்கையும் என்னை ஊக்குவிக்கிறது" என்று அமைதியாக கூறும் தமிழுருவி, ஆரவாரமில்லாத பணிவு நிறைந்த அடக்கமான தமிழறிஞர்.

*–சரோ சந்திரகோபால்*



ப.வை. ஜெயபாலன்

# முற்றத்து பொங்கல்





தைப்பொங்கல் என்றதும் சிறுபிராயத்தில் ஊரில் வீட்டு முற்றத்தில் பொங்கிய நினைவு தான் எழும். இன்று வீடும் வெறும் காணியான நிலை. நாடு திரும்பி அங்கு வாழும் நாட்டமும் எம் சந்ததிக்கு இல்லை. ஏக்கத்தோடு தைப்பொங்கல் நினைவை நெஞ்சம் இரை மீட்கிறது. போர் சூழலிலும் புலம்பெயர் வாழ்விலும் சுற்றமும் ஊரும் ஒன்றாய் கொண்டாடிய அந்த முற்றத்துப் பொங்கல் மகிழ்ச்சியை காண முடியவில்லை. உறவுகள் ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றாய் இணைந்து கொண்டாடிய தைப்பொங்கல் அது. அடுத்து அடுத்து பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த அயல் இரத்த உறவுகள், வேலிப் பொட்டுக்குள்ளால், பாசம் பொங்க பரிமாறிய பண்டங்கள், அன்றாட கொண்டாட்டங்கள், தொழில்நுட்ப வசதிகளும் வாய்ப்புகளும் கூட இன்று பொட்டுக்கடலையே இல்லாத இடை வேலியை உறவுகளுக்குள் இட்டு தூரப்படுத்திவிட்டன.

எங்கள் வலிவடக்கு பிரதேசத்திலும் மாரி மழை வெள்ளம் ஓடி வழுக்கை ஆறு கழிவுகளை இடித்து, கடலில் கறைந்து ஈரமண் காலில் ஒட்டும் நிலையில்தான் தை பிறக்கும். நீண்ட மார்கழி தவணை விடுமுறை நினைவாகி பள்ளிகள் ஆரம்பிக்கும். வகுப்பு ஏறிய மகிழ்ச்சி, புதிய வகுப்பு, புதிய ரீச்சர், புதிய புத்தகங்கள், எழுத்து கொப்பிகள், புதிய பாடங்களுக்கான நேர சூசிகை எல்லாமே புதிது. புத்தகங்களுக்கு உறைபோட்டு பெயர், வகுப்பு எழுதி சித்தி தைத்து தந்த சிலைப் பைக்குள் இட்டு செல்வதில் ஒரு திருப்தி, உற்சாகம்!

மாரிகால காரிருள் மாறி அதிகாலையிலேயே சூரியகதிர் மஞ்சள் வர்ணத்தில் ஒளிக்க ஆரம்பித்துவிடும். காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை வேலை நேரச் சங்கு காலை, மதியம், மாலை என்று வழமையை மீறி கணீரென்று ஊருக்குள் ஒலிப்பதும் தைக் காலத்தில்தான். உழவர்கள் கலப்பையும் காளை மாடுகளுமாக அடுத்த நடுகைக்கு மண்ணை தயாராக்க காலை வேளை வீதியில் செல்லும் சத்தம் காதில் கேட்கும். வீதிகள் வளவுகள் வெள்ளம் ஓடி சுத்தமாகக் காட்சி தரும்.

பள்ளி ஆரம்பமான சில நாட்களில் தைப்பொங்கல் தினம். அரச வங்கி, வர்த்தக விடுமுறை நாளாகவும் இருக்கும். ஒரு மாதத்துக்கு முன்பாகவே கடைகள், சந்தைகளில் வாணவெடி, பூரிஸ் என்றும், புதிய மண்பானை, சிரட்டை அகப்பை, சர்க்கரை, பயறு, பச்சை அரிசி கசுக்கொட்டை, முந்திரிகை வற்றல், புதுவருட தின நாள்காட்டிகள் எல்லாம் பொங்கல் கொண்டாட்டத்துக்காக விற்பனைக்கு வந்துவிடும்.

கூப்பன் கடைகள் என்ற சங்கக் கடைகளில் மலிவான விலைக்கு குடும்ப அங்கவத்தவர் தொகைக்கு ஏற்ப கிடைக்கும். பொங்கலுக்குத் தேவையான மண்பானை, சட்டிகளை மாட்டு வண்டியில் குலுங்கி உடையாதபடி வைக்கப் பரப்பி வைத்து வீதிக்கு வீதி வந்து கூவி விற்பதுவும் அக்கால வழக்கம்.

சுன்னாகம் சந்தையில் திங்கள், புதன், வெள்ளி என்று கூடும் வழமை நாட்களில் கூட்டம் அதிகமாவதும் தைப்பொங்கல் காலத்தில்தான். வெற்றிலை, பாக்கு, கரும்பு, வாழைக்குலை என்று சந்தையில் பொங்கல் பொருட்கள் நிறையும்.

யாழ்ப்பாண நகரில் பொங்கல் மலிவு விற்பனை பதாதைகள் எல்லா சேலை கடைகளிலும் தொங்கும். சினிமா திரை அரங்குகளில் புதியதாக எம்.ஜி.ஆர் - சிவாஜி படங்கள் வெளியாவதும் பொங்கல் விசேடம். பட வெளியீடு பற்றிய விளம்பர பலகையை காரின் இருபுறமும் கட்டியபடி பாடலும், ஒலி விளம்பரமுமாக சத்தத்துடன் வரும் விளம்பர வாகனத்தை பார்க்க வீதிக்கு ஓடுவோம். நோட்டீஸ் பொறுக்குவோம். வீட்டு முன்பான பெட்டிக் கடையில் நின்று வாகனம் பெரிய விளம்பரத்தாளை ஒட்டும். அதில் இருக்கும் நடிகர், நடிகை படத்தை நின்று ரசிப்பதிலும் ஒரு ஆனந்தம். ஞாயிற்றுக்கிழமை பதிப்பான கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் எல்லாம் புதன்கிழமை மாலையே தெல்லிப்பளை சந்தி பேப்பர் கடைக்கு விற்பனைக்கு வந்துவிடும். பொங்கல் சிறப்பு மலர்கள் கனதியானது. ஆர்வத்துடன் வாசிப்போம்.

பொங்கலுக்கு முன்பாகவே இரவு வேளைகளில் வெடிஓசை ஊருக்குக் கலகலப்பு ஊட்டும். யானை மார்க் வெடிகள் பெயர் பெற்றவை. நூறு வெடிகள் கொண்ட வட்டப்பெட்டி, 24 வெடிகள் கொண்ட வெடிப்புத்தகம், மூலவெடிகள் என வீட்டுக்கு வீடு வெடி ஓசை எழுப்பும். பின்நாளில் வர்ண ஜாலத்துடன் வானத்தில் வெடித்துச் சிதறும் வானவெடிகளும் இணைந்தன. சின்ன வயதில் பூரிஸ் குச்சிகளைக் கொளுத்தி, சுற்றி ஒளித்துகள்களை பார்த்து மகிழத்தான் எமக்கு அனுமதி கிடைக்கும்.

அம்மா அதிகாலை எழும்பி சாணத்தால் முற்றத்தை மெழுகி கோலம் இட, நாங்கள் வெடியோசை எழுப்ப, பொங்கல் ஆரம்பமாகும். நடுவில் மூன்று கல் அடுப்பு, அதன்மேல் அலங்கரிக்கப்பட்ட பெரிய பானை, கோல கட்டுக்குள் தென்மேற்கு மூலையில் சாணப் பிள்ளையார் சகிதம் நிறைகுடம். பானை நீர் கொதிக்க பால்விட, பாலும் பொங்க பானையின் வாயை மூன்று முறை சுற்றி அரிசி போட்டு, பதம் வர, முந்திரிகை, பருப்பு, கசுக்கொட்டை, சர்க்கரை எனப் போட்டு பொங்க, மகிழ்ச்சி பொங்கும். அம்மா முழுகிய தலைமுடியை பின்புறம் துணியோடு சேர்த்து கொண்டை போல் முடிந்து, விபூதி பூச்சோடு சேலையை இழுத்து இடுப்பில் சொருகியபடி சுறுசுறுப்பாக பொங்குவார். நாங்களும் முழுகி நல்ல உடையோடு உற்சாகமாக ஓடித் திரிவோம்.

பொங்கி முடிய படையல் ஆரம்பமாகும். கிழக்க பக்கம் மூன்று தலை வாழையிலையில் மூன்று முறை ஒவ்வொரு இலையிலும் அகப்பையால் அள்ளி பொங்கலை இட்டு, வாழைப்பழம், பணியார பண்டங்களைப் பரப்பி கற்பூரம், சாம்பிராணி காட்டி, சூரிய நமஸ்காரம் செய்வோம். தேவாரம், புராணம் பாடுவோம். படையல் நடக்க வெடி ஓசை சரவெடியாக தொடர்ந்து ஒலிக்கும்.

விறாந்தையில் பந்திப் பாய் விரித்து, அம்மா பரிமாற, நாங்கள் ஒன்றாக வரிசையில் சப்பாணிக்கட்டி உட்கார்ந்து அதை சுவைப்பது மறக்க முடியாத ஆனந்த நினைவு. பொங்கல் தினம் அயல் வீட்டு பொங்கல் குஞ்சு பெட்டிகளில் எம் வீட்டுக்கு வருவதும், எம் வீட்டு பொங்கல் எங்கும் பரிமாறப்படுவதும் வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் உச்ச சுவை தருவது அயலில் வசித்த இராதா வீட்டுப் பொங்கல்தான்.

மாபிள் அடி, கிறிக்கற், உதைப் பந்தாட்டம் என்பனவும், மாட்டு வண்டி சவாரிப் போட்டியும் பொங்கல் திருநாளில் எங்கள் பிரதேசத்தில் ஆங்காங்கே நடப்பது வழமை. இரவு உழவர் விழா என்ற கலை நிகழ்வு. எங்கள் ஊர் கலை மன்ற ஏற்பாட்டில் நடக்கும் விழா.

மறுநாள் மாட்டுப் பொங்கல் அன்றும் எங்கள் வீட்டில பசு மாடு அம்மம்மா வளர்க்கும் வரைக்கும் தொடர்ந்து நடந்தது.

கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் எங்கள் உறவினர்கள் வருவதும் பரிசுப் பொருட்கள், பணம் என்று எமக்கு கையில் தருவதும் நினைத்தாலே இனிக்கும் நடப்புக்கள். தொழில்நுட்ப வளர்ச்சி இயந்திரமயமாகும் வாழ்வியல் என்று எல்லாமே பழைய பண்டிகை முறையில் மாற்றத்தை கொண்டிருக்கின்றன.

ஆனால் அன்றைய ஊர் வாழ்வு முறையில், கொண்டாடிய "தைப்பொங்கல்" தந்த மகிழ்வு ஒப்பீட்டில் உள்ளத்தில் உயர்ந்து நிற்கின்றது. ●

## எம்முயிர்களைக் காத்திடவேயிங்கு!



பிறந்துவிட்டோம்
வளர்ந்துவிட்டோம்
நாமும்.....
இன்னுமேன் இறக்கவில்லை!

எம் மண்ணில்
நம் தாய் மண்ணில்
இறந்தவரை
நாமும்..... உலகும்.....
இன்னுமேன் மறக்கவில்லை!

இருப்பவர் மனங்களில்
அவர்கள்
இன்னும் இறக்கவில்லை,

அதனால்!

நாமும்.....உலகும்.....
இன்னும் அவர்களை
மறக்கவில்லை மறக்கவில்லை;

சொந்தமுமில்லை
சொந்தமண்ணில்
எமக்கு உயிருடன்
இனியொரு பந்தமுமில்லை!

இறக்கமுன் எம்மவர்
மனதில் எதுவுமில்லை,
இறந்தபின் மனிதர்
கொண்டு செல்வதும்
எதுவுமேயில்லை;

உண்மையுமில்லை
அரசிடம் உண்மையில்
நல்லதொரு உள்ளமுமில்லை;

நாம் மறந்தும்
நம் உரிமை
கேட்டுவிட்டாலோ! போதும்;
எம்மவருமில்லை!
எம்மவருயிருமில்லை!

சுதந்திரம் ஒரு
பாட்டிலுமில்லை,
எமக்கு இனியங்கு
எச்சுகமும் கூட
நாட்டிலுமில்லை;

வயிற்றுப் பசியென்றால்
வாழ்ந்திருக்கலாம்.....
இனியுமங்கு,

எம்மவருயிர் தான் பசி
ஆட்சிக்கென்றால்.....
எம்மவர் நாம் எங்கு
செல்வோம் எங்கு?

அடைக்கலம் வேண்டித்தான்
கேட்டு வந்தோம்
எம் உயிர்களுக்கு!

எம் உடல்களுக்கு நீங்கள்தான்
உயிர் தருவீர்கள்
என்று நம்பியிங்கு!

வாயிருந்தும் ஊமை போல
உள்ளமிருந்தும் ஆமை போல
மதியிருந்தும் மூடம் போல
உணர்விருந்தும் ஊனம் போல
என்னவிருந்தும் இல்லை போல,

வாழ்ந்து விட்டால்
வாழ்வுண்டங்கு,
இல்லையேல்
அழிவுண்டங்கு;

சொந்த நிலம் புலம்
விட்டகன்றங்கு,
புலம் பெயர்ந்த
உலகைத் தேடியிங்கு;

ஓடி வந்தோம்
அகதிகளாயிங்கு,
ஓடோடி வந்தோம்
எம் முயிர்களைக்
காத்திடவேயிங்கு!



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்








# தமிழ் இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என அறைகூவல்!

பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையின்(BTF) ஏற்பாட்டில் வருடா வருடம் இடம்பெறும் தைப் பொங்கல்நிகழ்வு தை மாதத்தினை "தமிழ் மரபுத் திங்கள்" (Tamil Heritage Month) என பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கருப் பொருளைமுன்வைத்து ஜனவரி 14ஆம் தேதி அன்று இடம் பெற்றது. அங்குகலந்து கொண்ட பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்பாரம்பரிய தமிழ் உடைகள் அணிந்து விழாக்களில் கலந்துகொண்டு தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைகௌரவப்படுத்திய துடன் தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்டஅநீதிகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்போம் என உறுதியளித்தனர்.

தைப்பொங்கல் என்பது இலங்கை, இந்தியா மற்றும் சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, தென்னாப்பிரிக்கா உட்பட்ட தமிழ் புலம்பெயர்ந்தமக்களாலும் தமிழ் சமூகத்தால் கொண்டாடப்படும் விழா. “தைப்பொங்கல்’ திருநாள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழையடிவாழையாக தொடர்கின்றது.

தமிழ் என்பது இந்தியா, இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட ஒருமொழி. இது 7.5 கோடிக்கும் அதிகமான நபர்களுக்கான முதல்மொழியாகவும் ஏறத்தாழ 6 இலட்சம் மக்களுக்கு இரண்டாவதுமொழியாகவும் உள்ள உலகின் மிகப் பழமையான செம்மொழிகளில் ஒன்றாகும். தற்போது. கி.மு 300 முதல் கி.பி 100 வரைபயன்படுத்தப்பட்ட தமிழின் ஆரம்ப வடிவங்களில் ஒன்றான பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்ட தமிழ் கல்வெட்டுகள் இலங்கையிலும்தாய்லாந்து மற்றும் எகிப்தில் உள்ள வர்த்தக பொருட்களிலும்கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் சிறந்த கட்டிடக் கலைக்கு உரித்துடையவர்கள். கி.பி1011 இல் பேரரசர் ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சாவூர்பிரஹதிஸ்வரர் ஆலயம் அவரது பேரரசின் பிரமாண்டத்திற்கோர்எடுத்து காட்டாக வடிவமைக்கப்பட்டது. ஆடல், பாடல், பரதநாட்டியம், தமிழ் இசைக் கருவிகளான மிருதங்கம், நாதஸ்வரம், தவில், வயலின், வீணை என்பன தமிழர்களின்செழுமையான கலை, பண்பாட்டு வடிவங்களின் முக்கியஅம்சங்களாகும். உலகமயமாக்கலிற்குத் தாக்குப் பிடித்து கலை, இலக்கியம், பண்பாடு, போன்ற தம் பாரம்பரியங்களைநவீனமயப்படுத்தி பேணுவதுடன் உயிர் வாழும் செம் மொழியாகதமிழை நிலைநிறுத்தி இந்த விழுமியங்களை எதிர்காலதலைமுறைக்கு தமிழர்கள் கையளிப்பது போற்றுதலுக்கு உரியது.

நிகழ்வு இடம்பெற்ற பாராளுமன்ற மண்டபம் கரும்பு, வண்ணமயமான ‘கோலம், கலைப் படைப்புகள், இசைக்கருவிகள், பொங்கல் பானை என்பனவற்றால் அலங்கரிக்கப்பட்டு தமிழ்மக்கள் போற்றும் பாரம்பரியதின் பிரதிபலிப்பாக அமைந்திருந்தது. தமிழ் பள்ளி மாணவர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் நடனக்கலைஞர்கள் தமிழரகள் பேணிக் காக்கும் விழுமியங்களை வெளிக்கொண்டு வரும் வகையில் அற்புதமான நிகழ்ச்சிகளை நடத்தினர்.

தைப் பொங்கலை நாம் கொண்டாடும்போது, இலங்கையில் 30 ஆண்டுகால இனப்படுகொலைக்கான நீதி, பொறுப்புக் கூறல்மற்றும் அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்காக பாதிக்கப்பட்ட தமிழ்சமூகம் இன்னும் காத்திருக்கிறது என்பதை நினைவில் கொள்வதுஅவசியம் என்பதனை அங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் வெளிக் கொண்டு வரப்பட்டது ஒரு முக்கியவிடயமாகும்.

கரேத் ஜான்சன் எம்.பி (Gareth Johnson MP), கௌரவ எட் டேவிஎம்.பி (Rt Hon Sir Ed davey MP), கரேத் தாமஸ் எம்.பி (Gareth Thomas MP), கௌரவ ராபர்ட் ஹால்பன் எம்.பி (Rt Hon Robert Halfon MP), போல் ஸ்கல்லி எம்.பி (Paul Scully MP), சர் டேவிட்அமெஸ் எம்.பி (Sir David Amess MP), கௌரவ ஸ்டீபன் டிம்ஸ்எம்.பி (Rt Hon Stephen Timms MP), மான் பிரபு (Lord Mann), ஜேனட் டாபி எம்.பி (Janet Daby MP), பெர்ரி கார்டினெர் எம்.பி(Barry Gardiner MP), வெஸ் ஸ்ட்ரீட்டிங் எம்.பி (Wes Streeting MP), சுற்றுச்சூழல், உணவு மற்றும் கிராம விவகாரங்களுக்கானஅமைச்சர் கௌரவ தெரேசா வில்லியர்ஸ் எம்.பி (Rt Hon Theresa Villiers MP) ஆகிய தொழில் கட்சி (Labour party), பழமைவாதகட்சி (Conservative party), லிபரல் டெமோகிராடிக் கட்சியை(Liberal Democratic party) சேர்ந்த பிரித்தானிய நாடாளுமன்றஉறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நீதி தேடும்தமிழர்களுக்கு தங்கள் ஆதரவை உறுதியளித்தார்கள்.

இங்கிலாந்தில் 300,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் இங்கிலாந்தின் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்குகணிசமான பங்களிப்பை வழங்குவதுடன் கலாச்சார பன்முகத்தன்மையின் செழுமைக்கும் வலுச் சேர்க்கிறார்கள். பிரித்தானியாவிற்கு தம் சிறந்த மரபுகள் மற்றும் பங்களிப்புகளைவழங்கி வரும் தமிழர்களை கௌரவித்து அவர்களின்அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஜனவரி மாதத்தை"தமிழ் மரபுத் திங்கள்" ஆக (Tamil Heritage Month) அறிவிக்குமாறு தமிழ் சமூகம் கேட்டுக் கொள்கின்றது. ●

## லண்டனில் முதற் தடவையாக ‘சாஸ்வதம்’ போட்டி நிகழ்ச்சி

நவஜோதி ஜோகரட்னம்







‘பரதநாட்டியத்தின் உச்சம் இசையின் காட்சி வடிவம். அது ஒரு சடங்கு. பக்தியின் செயற்பாடு. நடனத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒருவர் அதே அளவுக்கு இசைக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்த இரண்டு கலை வடிவங்களிலும் முழுப் பயிற்சி பெற வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அத்தகைய கலைவடிவத்தை இன்று ‘சாஸ்வதம்’ என்ற நிகழ்ச்சி மூலம் முதற்தடவையாக முன்னெடுத்த கலாநிதி ஜெயந்தி யோகராஜாவும், ஸ்ரீமதி பவித்ரா சிவயோகம் அவர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். லண்டனில் பரத நாட்டியத்தைப் பயின்று வரும் மாணவர்கள் தமது அபிநயம் இசை இரண்டையும் மிக அழகாக இணைத்துத் தம் கருத்துக்களை ரசிகர்களுக்கு வெளிப்படுத்திய விதம் அபாரமானது. நடனக்கலையைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் உட்பட, மாணவர்களின் திறமையை விதந்து மகிழ்கின்றோம். அத்தோடு களம் அமைத்துக் கொடுத்த UDear Guinness Dance இங்கிலாந்தின் நிர்வாகியாகவும் சர்வதேச நடனப்போட்டிகளின் பரிசோதகராகவும் செயற்படும் கலாநிதி ஜெயந்தி யோகராஜாவும், சென்னை ராஜ், சண் தொலைக்காட்சிகளில் தொகுப்பாளராகவும், கலாச்சார நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்ட பவித்திரா சிவயோகத்தினதும் கடின முயற்சிக்கு தலைசாய்க்கின்றோம். இவர்களின் வித்தியாசமான இச்செயற்பாடு மண்டபம் நிறைந்த மக்களின் இதயங்கனின் மீது பொழிந்த அமுத மழையாக இருந்தன’ என்று பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த முன்னாள் லண்டன் நகர முதல்வரும் தற்போதைய ஹரோ நகர சபை உறுப்பினரமான லண்டன் பாபா- சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் தமது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்திருந்தார்.

லண்டனில் பரதநாட்டியத்தைப் பயிலும் பத்துக்கும் மேற்பட்ட அமைப்புக்களிலிருந்து திறமைமிக்க மாணவக்குழுக்கள் பங்குபற்றி; நடனத்தின் உள்ளார்ந்த அழகை உள்ளுணர்வுகளோடு வெளிப்படுத்தியிருந்தனர். ஸ்ரீமதி சுஜாதா சிறீயின் மாணவர்கள் தமது கலைத் திறமையை வெளிப்படுத்தி; முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டனர். ‘சாஸ்வதம்’ நிகழ்வில் நாட்டியத் தாரகைகளின் கலை நுட்பங்களை ஆழமாகக் கிரகித்து மதிப்பீடு செய்யும் நடுவர்களாக லண்டனில் பிரபல்ய நாட்டிய ஆசிரியர்களாகத் திகழும் ஸ்ரீமதி ராகினி ராஜகோபால், ஸ்ரீமதி ஸ்ரீமதி பத்மினி குணசீலன், ஸ்ரீமதி பாமினி சித்ரரஞ்சன், ஸ்ரீ ரூபேஷ் கேசி, கலாநிதி ஜெயந்தி யோகராஜா ஆகியோர் பிரசன்னமாகியிருந்தமை மிகச் சிறப்பைக் கொடுத்திருந்தது. போட்டி நடனங்களுக்கு மத்தியில் விருந்தினர் கலைத்திறைமைகளை வெளிக்காட்டும் முகமாக நாட்டிய ரூபினி சஸ்கியா யோகராஜாவும் ஸ்ரீ ரூபேஷ் கேசி இணைந்து வழங்கிய வரவேற்பு நடனம் நளினத்துடன் வசீகரம்;, அழகியல் உணர்வை வெளிக்காட்டி நின்றது. செல்வன் ஆதித்திய சர்மா, மற்றும் பாரத கலா ஃபைன் ஆட்ஸ் குழுவினரின் நடனம், பபிதா ஹரிதரன் போன்ற நடனக் கலைஞர்களின் நடனங்களும் இடம்பெற்றிருந்தன.



போட்டியாளர்களுக்கும் மற்றும் முக்கிய விருந்தினர்களுக்கும் விருதுகளை வழங்குவதற்கு ஹெபிற்றா லிமிற்டட் திரு. மனோ சிவயோகம், பொன்மகள் யுவலறி உரிமையாளர்கள் திருமதி வாசுகி தயாகரன், வாஸ்ரா சாறி உரிமையாளர்களான திருமதி தர்ஷனா மனோ போன்றோர் முன்வந்து தமது ஆதரவை வழங்கியமை இந்நிகழ்ச்சிக்கு மிகச் சிறப்பையும், உற்சாகத்தையும் அளித்தது. லண்டனில் இடம்பெறும் பல்வகை கலைநிகழ்சிகளிலிருந்து வித்தியாசமான உணர்வையும், ஆத்மார்த்த, மகிழ்வையும் நிறைத்த ஒரு நிகழ்வாக அமைந்திருந்தமை பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

நவஜோதி ஜோகரட்னமும் சஸ்கியா யோகராஜாவும் அழகுறவே இக்கலை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருந்தனர். ●







# திரும்பிச் செல்ல விருப்பமில்லை

# இந்திய குடியுரிமை வழங்குவதே தீர்வு!

**முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களின் நிலை பற்றி கடந்த பத்து ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருகிறார் சென்னைப் பல்கலைக்கழகக் குற்றவியல் துறையின் மூத்த ஆய்வாளர் இளம்பரிதி. தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களுக்கு மட்டுமல்லாது, இலங்கைக்கும் பலமுறை பயணம் மேற்கொண்டிருக்கிறார் இவர்.**

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை அரசியல் தளத்தில் தொடர்ந்து முன்வைத்து வருகிறார். புதிதாக நிறைவேற்றப்பட்ட குடியுரிமை சட்டத் திருத்தத்துக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள சூழலில், இளம்பரிதியைச் சந்தித்து சில கேள்விகளை முன்வைத்தோம்.

"இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்த தமிழர்கள் எந்தெந்தக் காலகட்டங்களில், என்னென்ன காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்தனர். இந்திய அரசு அவர்களை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளது?"

"1948-ல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, இலங்கையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 9,75,000 மலையகத் தமிழர்கள் இருந்தனர். இவர்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் இலங்கை சிங்கள அரசு காலப்போக்கில் பறித்தது. இதனால், அவர்கள் நாடற்றவர்களாக மாறினர். ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தவரையில் பிரிட்டிஷ் காலத்தில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து மற்ற நாடுகளுக்குச் சென்றவர்கள் அந்த நாடுகளின் குடிமக்களாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

1964-ல் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்தபோதுதான் இலங்கை- இந்தியா அரசு இடையே சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இது 1974-ல் இந்திரா காந்தி ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி, 'ஆறு லட்சம் மலையகத் தமிழர்களை இந்திய அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படும்' என்று உறுதியளிக்கப்பட்டது. 1983-ம் ஆண்டு வரை இந்தியா வந்த 4,61,631 தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் 'தாயகத் திரும்பியோர்' (Repatriates) என அழைக்கப்பட்டனர்.

1983-ல் இலங்கையில் கலவரம் தொடங்கியதால், Repatriation பணி இந்திய அரசால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதற்குப் பிறகு தாயகம் திரும்புவோர், பூர்வீக இலங்கைத் தமிழர்கள் என இருவருமே உயிர் பிழைக்க இந்தியா திரும்பினர். இரு தரப்பினருமே ஒன்றாக இந்தியா முழுவதும் அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். 1983-ல் இந்திய அரசு நிறுத்திய Repatriation பணியை தற்போதுவரை தொடங்கவில்லை. முந்தைய அரசு ஒப்பந்தங்களின்படியே இன்னும் 1,40,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டிய தார்மீக கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது.

1987-ல் கையெழுத்திட்ட ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்திலும், குடியுரிமை வழங்கும் பணி மீண்டும் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதுவும் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. அப்போது தொடங்கி 2009-ம் ஆண்டு போர் சமயம் வரை இந்தியா வந்தவர்களில் மலையகத் தமிழர்கள் தாயகம் திரும்பியோராகவும் (Repatriates), இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகவும் (refugees) உள்ளனர். 108 முகாம்களில் 60,000-க்கும் அதிகமானோர் மற்றும் வெளியே 35,000 என 95,000 பேருக்கும் அதிகமாகக் குடியுரிமை இல்லாமல் வசித்து வருகின்றனர். முகாம்களில் மட்டும் சுமார் 29,000 பேர் தாயகம் திரும்பியோராக உள்ளனர். இவர்கள் சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இந்தியக் குடியுரிமைக்குத் தகுதியுடையவர்கள். அவர்களோடு சேர்ந்துதான் இலங்கைத் தமிழர்களும் உள்ளனர்.

இங்கே இன்னொரு சிக்கல் என்னவென்றால், இந்தியா எந்தவொரு சர்வதேச அகதிகள் உடன்படிக்கையிலும் கையெழுத்திடவில்லை. இந்தியாவுக்கு வரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களையும் Foreigners Act-ன் கீழ் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகத்தான் (illegal immigrants) பதிவு செய்யப்படுவார்கள். 2014-ம் ஆண்டில் இந்திய அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்திருந்தது. அதில், "புதிய குடியுரிமைச் சட்டத்தின்மூலம் பயன்பெற இருக்கும் மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்களை, சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகக் கருதக் கூடாது' என அறிவித்திருந்தது. இது இலங்கைத் தமிழர்களுக்கும், ரோஹிங்கியா அகதிகளுக்கும் பொருந்தாது. புதிய சட்டத்தின் மூலம் 31,000 பேர் குடியுரிமை பெறுவார்கள் எனச் சொல்லப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள் 95,000 பேர் பல ஆண்டுகளாக இந்தியாவில் உள்ளனர். இவர்களின் குடியுரிமை கேள்விக்குறியாகவே உள்ளது."

"இந்தியச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் சேர்க்கப்படவில்லை என்பது முக்கியமான குற்றச்சாட்டாக உள்ளது. சட்டபூர்வமாக அவர்களின் நிலை என்ன?"

"இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை கோரிக்கையை இந்தச் சட்டத்துடன் சேர்த்துப் பார்க்க வேண்டிய தேவையே இல்லை. இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளது. புதிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இதுபோன்ற வரலாற்றுப் பின்னணி கிடையாது. அதற்காக அவர்களுக்கு குடியுரிமை தரக் கூடாது எனச் சொல்லவில்லை. ஆனால், தமிழர்களுக்கு மத்திய அரசு மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதுதான் வருத்தமாக உள்ளது.

தமிழக அரசியல்வாதிகளுமே இதை சரியான விதத்தில் மத்திய அரசிடம் முன்வைத்ததாகத் தெரியவில்லை. கருணை அடிப்படையில் குடியுரிமை வழங்க வேண்டும் என்கிற வாதமும் தவறு. சட்டபூர்வமாக இவர்களுக்கான உரிமை அது. 1980-களில் பரபரப்பான சூழலில் அரசால் குடியுரிமை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டதால் அவர்களுக்கான உரிமையில்லை என்றாகிவிடுமா? அதே அடிப்படையில்தான், இலங்கைத் தமிழர்களுக்கும் சேர்த்து குடியுரிமை வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை வருகிறது. உயிருக்கு அச்சுறுத்தலான சூழலில் அவர்கள் இந்தியா வந்துள்ளனர். ரோஹிங்கியா மக்களின் கதையும் அதே நிலைதான்".

"தமிழர்களின் குடியுரிமை கோரிக்கை அரசியல் ஆக்கப்படுகிறதா?"

"இது ஓர் அரசியல் பிரச்னைதான். முந்தைய அரசு செய்த ஒப்பந்தங்களை அதற்குப் பிறகு வந்த அரசுகள் காற்றில் பறக்கவிட்டன. திபெத்திய அகதிகளும் இந்தியாவில் உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை, கலாசாரத்தைப் பாதுகாக்க, இந்திய அரசு பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது. திபெத்தியர்களுக்கு பயண ஆவணங்கள் இந்திய அரசால் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் அவர்கள் வெளிநாடுகளுக்குக்கூட செல்ல முடியும். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்த வசதியும் கிடையாது."

"முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலை என்ன... அவர்களின் கோரிக்கை என்னவாக இருக்கிறது?"

"இலங்கைத் தமிழர்கள் உள்ள முகாம்கள் மிகவும் மோசமான நிலையில்தான் இருக்கின்றன. போர் முடிந்த பிறகு இந்தியாவிலிருந்து கிட்டத்தட்ட 10,000 பேர் வரை இலங்கை திரும்பியுள்ளனர். இலங்கையில் உள்ள தமிழர்களே போருக்குப் பிறகு உள்நாட்டு அகதிகளைப்போல்தான் இருந்து வருகின்றனர். போர்க்குற்றம் புரிந்த அரசுதான் தற்போது இலங்கையில் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது.

கடந்த ஆட்சியிலாவது ராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு போன்றவை குறைவாக இருந்தன. தற்போது இவை அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. இதனால், தமிழர்கள் எவரும் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை என்பதுதான் உண்மை நிலை. ஆனால், சில அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்கள் திரும்பிச் செல்ல விரும்புவதாகச் சொல்கின்றனர். அது முற்றிலும் தவறு."

"இலங்கைத் தமிழர்களுக்கு என்ன தீர்வு தர முடியும்?"

"இரட்டை குடியுரிமை வழங்கலாம் என்று சிலர் குரல் கொடுக்கின்றனர். இந்தியச் சட்டங்கள் இரட்டை குடியுரிமையை அனுமதிப்பதில்லை. சட்டபூர்வமாக இது எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்றும் தெரியவில்லை. கிட்டத்தட்ட இரண்டு, மூன்று தலைமுறையினர் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்திருக்கின்றனர். இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. அதுவே தீர்வாகவும் இருக்க முடியும்." ●



# ஆயிரத்தில் ஒருவன்

இருபத்தைந்து ஆண்டு காலத்துக்கு மேலான அவரது இருதயப்பூர்வமான இறுக்கமான நட்பை இலகுவாக எப்படி மறக்கமுடியும்? அவருடன் வாழ்ந்திருக்கிறேன் என்று சொன்னால்கூட மிகப் பொருத்தமாக இருக்கும்.

நண்பர் சோதி என்னிடம் எதையும் ஒழித்து மறைத்துப் பேசியது கிடையாது. நானும் மனதில் பட்டதையெல்லாம் சொல்வேன்.

என் பத்திரிகைப் பயணத்தில் அவர் நிறையவே உதவியிருக்கிறார். சலித்துப் போகிற நேரங்களில் என்னை உற்சாகப்படுத்தி இயங்க வைத்திருக்கிறார்.

தன்னந்தனியனாக ஒரு பத்திரிகையை நடத்துவது எந்தளவு கஷ்டமானது என்பதனைப் பலரும் அறிந்திருந்தாலும், எனக்குக் கை கொடுத்து, என்னோடு 'பங்காளி'யாக வாழ்ந்திருக்கிறார்.

நீண்டகாலம் 'புதினம்' மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருந்தது. எனது காரில் பத்திரிகையை அச்சகத்திலிருந்து எடுத்து, விநியோகத்துக்கு வீட்டிலிருந்து புறப்படுவதற்கு தயாரானாலும், ஒருவருக்காகக் காத்திருப்பேன். அவர் வருவார். சாரதி ஆசனத்தில் அமருவார். அவர் பக்கத்தே நான் அமர்வேன். வேலை செய்கிறோம் என்ற உணர்வே எனக்கு ஏற்படுவதில்லை. அவரை, அவர் வீட்டுப் பக்கமாக இறக்கிவிட்டு, வீடு வந்து சேர இரவு 10 மணி ஆகிவிடும். ஒரு ஆண்டா? இரண்டாண்டா?

'புதினம்' இதழை கடைகளிலோ, கோயில்களிலோ வைக்கிற போது, 'சோதி, எங்கே?' என்று என்னைக் கேட்கிற அளவுக்கு, நாங்கள் 'இரட்டையராக' இணைந்திருந்தோம்.

நண்பர் சோதி 'பங்காளி'யாக மட்டுமல்ல, என் நெருக்கமான 'கூட்டாளி'யாக, அவர் எதைச் சொன்னாலும் எதிர்வாதம் புரிந்தாலும், அவரது கூற்றில் உள்ள உண்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

எனது மகளின் திருமணத் திகதியை முடிவு செய்து, மண்டபம், கார்ட் வரை இரு பகுதியினரும் சம்மதித்து, வேலைகள் நடந்து கொண்டிருந்த சமயத்தில், சோதி வீட்டுக்கு வந்தார். மகளின் திருமணத் திகதியைச் சொன்னேன். சில நிமிடங்களின் பின் சர்வசாதாரணமாக அந்தத் திகதியை மாற்றுமாறு கூறினார். "அந்தத் திகதியில் நடந்தால் நான் வரமாட்டேன்" என்று கூறினார்.

"சோதி, நான் என்ன செய்ய? எப்படி மாற்றுவது? உங்களாலே பெரிய கரைச்சல்" என்று கோபித்துப் பேசிவிட்டேன். நன்றாக அன்று இரவு முழுவதும் யோசித்து, சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி, சோதி சொன்ன சொல்லுக்கு மதிப்புக் கொடுத்தேன்.

என்மீதும், என்னுடைய குடும்பத்தின் மீதும் அவர் வைத்திருந்த அளவிட முடியாத அன்புதான் உரிமையோடு "திகதியை மாற்று" என்று சொன்னார்.

எது எப்படியோ, மகள் - கணவனுடனும், மூன்று பிள்ளைகளுடனும் மகிழ்ச்சியாக வாழ்கிறாள். அவர்களும் சோதி மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள்.

ஆறு திருமுருகன், சுப வீரபாண்டியன் போன்றவர்களின் நட்பும் எங்கள் வீட்டில் ஆரம்பமானது என்பதனை நினைத்துப் பார்ப்பதுண்டு.


'தமிழர் தகவல்' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது. 'தகவல்கள்' கொண்ட சஞ்சிகை விரைவில் வெளிவரும் என்று 'புதினம்' இதழில் விளம்பரப்படுத்தி வந்தேன். "'தமிழர் தகவல்' என்று ஒரு மாத இதழ் ஆரம்பிக்கலாமென்று விரும்புகிறேன். நீங்கள் விளம்பரப்படுத்தியிருப்பதால், என்ன சொல்கிறீர்கள்?" என்று ஒருநாள் கேட்டார். "பரவாயில்லை தொடங்குங்கள். என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்று சொன்னேன்.

இதனை அவரே தனது 'தமிழர் தகவல்' இதழில் நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் கேட்காமலேயே, தமிழகம் சென்று திரும்புகிற வேளையில், எனக்கு ஏதாவது கொண்டு வந்து தருவார். ஒருமுறை நூறு 'ஸ்டிக்கர்' கொண்டு வந்து தந்தார். அதில், படியுங்கள் 'புதினம்'. இன்னொரு முறை 'புதினம் - இலண்டனிலிருந்து இலவச இதழ்' என்ற போஸ்டர் 'புதினம்' இதழின் முன் பக்கப் படத்துடன்.

அவருடைய குடும்பத்தாருடன் இருந்த உறவு போன்று அவரும் என் வீட்டுக்கு அடிக்கடி வருவார். என் மனைவி, பிள்ளைகளுடன் - எனது தம்பி, தங்கைகளோடு மிக அன்போடு பழகியிருக்கிறார். எனது 93 வயதான தாயார், சோதி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். "அவர் மறைந்த செய்தி"யை அம்மாவிடம் சொன்ன போது, சோதி ஒருமுறை எங்கள் வீட்டில் தனக்குத் தந்த சேலையைப் பற்றிச் சொல்லிக் கவலைப்பட்டார்.

எனது 'புதினம்' இதழில் அவர் படத்துடன், அவரது எழுத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. 'உள்ளதைச் சொல்வேன்' என்ற தலைப்பில் அவர் எழுதியவைகள் என் கண்களை நனைக்கின்றன.




லண்டனில் நடந்த அன்னாரது நினைவு அஞ்சலியின்போது வெளியிடப்பட்ட சிறப்பான நூல்
தொகுப்பு : முரளி

'புதினம்' 20-ஆவது ஆண்டு மலரில் நண்பர் சோதி எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி :

"இருபது ஆண்டுகள் ஒருவரின் இடைவிடாப் பயணத்தை இலண்டனில் கண்டிருக்கிறேன். புரிதலுடன் அந்த நட்பின் ஆழத்தை புதினம் ஆகப் பார்த்திருக்கிறேன். இடைவெளிகள் எமக்கிடையே ஏற்படினும் மனதளவில் உளவெளிகள் உருவானதில்லை.

அள்ளக் குறையாத அந்த நட்பின் செறிவை அருமை நண்பர் இராசகோபால் அவர்களிடமிருந்து அள்ளிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து கால் நூற்றாண்டை தொட நிற்கும் எழுத்தும், வெளியீடுமான அந்த ஆளுமையின் ஆற்றலைக் கண்டு வியந்திருக்கிறேன். அவர் விக்கிரமாதித்தன் போல மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறவர். விழுகின்ற வேகத்தை விஞ்சி எழுந்து நிற்கும் ஓர்மம் உன்னதமானது. அதுதான் ஈ.கே. இராசகோபால்.

இலங்கையில் ஈழநாடுவில் தொடங்கி, தினகரன் வரையும் அவர் சேவையும் அனுபவங்களும் அர்ப்பணிப்பும் போற்றப்பட்டவை. ஆனால், அந்த கால அனுபவங்களை பகிர்ந்துகொள்ள அந்தக் கால அறிமுகம் கிடைத்திருக்கவில்லை. அது எனது இழப்புகளில் ஒன்று. இலண்டனில் தமிழர் தகவல் தொடங்க, அதன்பின் தொடர அவர் தந்த பங்களிப்பும் வழிகாட்டலும் பாராட்டப்பட வேண்டியவை. என்னைப் பொறுத்தவரை என் பத்திரிகை அனுபவத்திற்கு ஆசி கூறிய ஆசான் எனலாம். இடர்ப்பாடுகள், துயர்பாடுகளிடையே ஒன்றி நின்ற உண்மையான நட்பு அது".

நண்பர் சோதியிடம் நினைத்ததைச் சாதிக்கின்ற ஆற்றல் என்னை வெகுவாகக் கவர்ந்தது. செய்ய முடியாது என்று நினைப்பதை செய்து காட்டுவார்; வென்று காட்டுவார். அன்பான மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், அருமைக்கு அருமையான தவமிருந்து பெற்ற செந்தூரன், நல்ல மருமக்கள் - தலைநிமிர்ந்து அவரால் வாழவைக்கப்பட்ட குடும்பம். ஆம் - ஆயிரத்தில் ஒருவன் சோதி.

அவர் பிரிவைத் தாங்க முடியாது இதயம் மௌனமாக அழுது கொண்டிருக்கிறது! ●

## குறொய்டன் தமிழ் சமூக அமைப்பின் தமிழர் புத்தாண்டு விழா

குறொய்டன் தமிழ் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் தமிழரின் கலை, கலாசாரம், தொன்மையைப் பறை சாற்றும் தமிழர் புத்தாண்டுவிழா (பொங்கல் விழா 2020) மிகச் சிறப்பாக ARCBI SHOP TENISON'S பாடசாலை மண்டபத்தில் கடந்த 25ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற்றது. பரதநாட்டிய நடன நிகழ்ச்சிகளுடன் பொங்கல் விருந்தும் சபையோருக்குப் படைக்கப்பட்டது. லண்டனில் பிரபல நாட்டிய வித்தகி 'நாட்டியாலயா' நடன ஆசிரியை ராகினி ராஜகோபாலின் மாணவகளின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் பலரையும் கவர்ந்தது.





தமிழ் சமூக அமைப்பினர் பாரம்பரிய முறைப்படி குறொய்டன் மேயர் முன்னிலையில் பொங்கலை நடத்தினார்கள்

## வாரத்தில் 6 நாட்கள் 6 மணிநேரம் மட்டும்!

வாரத்தில் நான்கு நாட்கள் மட்டும் வேலை; அதுவும் நாள் ஒன்றுக்கு ஆறு மணிநேரம் வேலை செய்தால் போதும் என்று புதிய திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார் பின்லாந்து நாட்டின் பெண் பிரதமர் சன்னா மரீன்.

ஐரோப்பியாவின் அழகு கொழிக்கும் பின்லாந்து நாட்டின் 34 வயதான இளம் அழகியான புதிய பிரதமர் சன்னாமரின் இப்புதிய திட்டத்தினை அறிவித்து, தன் நாட்டு மக்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்துள்ளார்.



உலகின் இளம் பிரதமராகத் திகழும் மரின் பின்லாந்தின் மூன்றாவது பெண் பிரதமர். கடந்த டிசம்பர் 6–ஆம் திகதியில் பதவி ஏற்றதிலிருந்து தனது நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

தமது குடும்பத்தாருடன் அதிக நேரம் செலவிட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்துமுள்ளார். பின்லாந்து மக்கள் இந்தப் புதிய திட்டத்தை இப்போது கொண்டாடி வருகின்றனர்.



வேல் தர்மா




# உலகையே நடுங்க வைக்கும் சீனாவின் கொடிய தொற்று நோய்!

சீனாவின் பொருளாதாரம் இந்தியாவினது பொருளாதாரத்திலும் பார்க்க 2020-ம் ஆண்டு வளரும் என பன்னாட்டு நாணய நிதியம் அறிவித்திருந்தமையாலும் அமெரிக்காவுடன் நடந்த வர்த்தகப் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டமையாலும் சீனர்கள் தங்கள் எலிப்புத்தாண்டை அமோகமாகக் கொண்டாடத் தயாரான வேளையின் சீனாவில் கொரோனோ நச்சுக்கிருமிகளால் கொடிய தொற்று நோய் ஒன்று பரவ ஆரம்பித்தது. நுரையீரலை முதலில் தாக்கி காய்ச்சல், நெஞ்சு வலி, அதிகரித்த இதயத்துடிப்பு, மூச்சுத்திணறல் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கும் இந்தத் தொற்று நோய் நிமோனியாவையும் சிறுநீரகச் செயலிழப்பையும் ஏற்படுத்தி ஆட்களைக் கொல்லக் கூடியது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவரகளுக்கு சிகிச்சையளித்த பதினொரு பேரை அது தொற்றிக் கொண்டதுடன் ஒரு மருத்துவரின் உயிரையும் பறித்துள்ளது. உலக மருத்துவ நிபுணர்கள் கொரோனோ நச்சுக்கிருமிகளின் மூலத்தைக் கண்டறிவது சிரமம் என்கின்றனர்.

### பரவும் வேகம் அதிகரிக்கின்றது

மலேசியா, ஹொங் கொங், மக்கௌ, சிங்கப்பூர், வியட்னாம், ஒஸ்ரேலியா, கனடா, பிரான்ஸ், தாய்லாந்து, தென் கொரியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஆகியவை உட்படப் பதினைந்து நாடுகளுக்கு கொரேரானா நச்சுக்கிருமி பரவியுள்ளது. இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோரை இது தாக்கியுள்ளது. ஐம்பத்தியாறு பேருக்கு மேல் இறந்துள்ளனர். கார்டியன் பத்திரிகை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கு மேல் என்கின்றது. நோய் பரவும் வேகமும் நாடுகளும் பீடிக்கப்பட்டோர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இந்த நோயால் பீடிக்கப்பட்டவர் தான் அந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று அறிய முன்னரே அவரில் இருந்து மற்றவர்களுக்கு கிருமிகள் பரவத் தொடங்கிவிடும் என்கின்றார் சீன சுகாதாரத்துறை அதிகாரி.

### அரசின் திடமான முடிவும் தீர்க்கமான நடவடிக்கைகளும்

2020 ஜனவரி 25-ம் திகதி சீன அதிபர் சீனாவின் உச்ச அதிகார அவையான அரசியலவையின் நிலையியற் குழுவின் கூட்டத்தைக் கூட்டினார். அதில் அவர் கொரோனோ கிருமிகள் பரவும் வேகம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது என அறிவித்தார். ஏழு பேர் கொண்ட அந்த அவை சீனாவில் அபாயநிலை பிரகடனப்படுத்தியது. ஹொங் கொங் முதல்வரும் அவசரநிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார். சீனா பெருமளவு நிதியை ஒதுக்கி அதிக அளவு ஆளணியக் களத்தில் இறக்கி துரித தடுப்பு நடவடிக்கைகளை கொரோனோ நச்சுக்கிருமிகள் பரவுவதற்கு எதிராக எடுக்கின்றது. ஆயிரம் படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவமனை ஒன்று ஒரு சில நாட்களுக்குள் உருவாக்கப்பட்டது.

### சீனாவின் சிக்காக்கோவாக வுஹான் நகரம்

சீனாவின் ஐம்பது மில்லியன் மக்களைக் கொண்ட ஹுபேய் மாகாணத்தின் தலைநகரான வுஹானில் கொரொனோ நச்சுக்கிருமியின் தாக்கம் ஆரம்பமானது. அமெரிக்கா தனது அரசுறவியலாளர்களை (இராசதந்திரிகளை) வுஹான் நகரில் இருந்து வெளியேற்றியது. 2018-ம் ஆண்டு சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் 2018 ஏப்ரலில் வுஹான் நகரிலேயே கேந்திர முக்கியத்துவம் மிக்க சந்திப்பைச் மேற்கொண்டனர். பதினொரு மில்லியன் மக்களைக் குடியிருக்கும் வுஹான்மத்திய சீனாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நகரமாகும். அது சீனாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஏழாவது நகரமாகும். சீனாவின் ஒன்பது முக்கிய நகரங்களுள் வுஹானும் ஒன்றாகும். வரலாற்று அடிப்படையில் அதன் பெயர் மூன்று நகரங்களின் சங்கமம் என்னும் பொருள் கொண்டது. வுஹான் நகரம் மத்திய சீனாவின் பொருளாதாரம், அரசியல், நிதிச்சந்தை, வர்த்தகம், கலாச்சாரம், கல்வி ஆகியவற்றின் இதயமாக இருக்கின்றது. பல விரைவு நெடுஞ்சாலைகள், தொடரூந்துப் பாதைகள் ஆகியவை வுஹான் நகரூடாகச் செல்கின்றன. மூன்று நதிகள் பாயும் வுகான் நகருக்கு அண்மையாக மிகப்பெரிய அணை உள்ளது. அங்கு உலகின் மிகப்பெரிய அளவில் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்ப்டுகின்றது. மூன்று தேசிய அபிவிருத்தி வலயங்கள், நான்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திப் பூங்காக்கள், 350இற்கு மேற்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் 1656 உயர்தொழில்நுட்ப நிறுவனங்கள் வுஹான் நகரின் இருக்கின்றன. இவற்றால் வுஹான் நகரம் சீனாவின் சிக்காக்கோ என அழைக்கப்படுகின்றது.



### பொருளாதாரப் பாதிப்பு

சீனாவைச் சுற்றவுள்ள எல்லா நாடுகளிலும் கொரோனோ நச்சுக்கிருமிகள் பரவத் தொடங்கியுள்ளன. வுஹான் நகரில் இருந்து மற்ற இடங்களுக்கு போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதுடன் வுஹானில் இருந்து வெளியூர்களுக்குச் செல்லும் விமானங்கள் மற்றும் ரயில்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. நாடெங்கும் எழுபதினாயிரம் திரையரங்குகள் முடப்பட்டுள்ளன. வுஹான் உட்பட பதினாறு நகரங்கள் மூடப்பட்டுள்ளன. கொரோனோ நச்சுக்கிருமிகள் பரவுவதைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகளால் உலகப் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் 2020 ஜனவரி 23-ம் திகதி வியாழக்கிழமை அமெரிக்கப் பங்குச் சந்தை ஆட்டம் கண்டது. பங்குச் சுட்டெண் 200 புள்ளிகளால் முதலில் வீழ்ச்சியடைந்தது. உலக சுகாதார விஞ்ஞானத்தில் முதலிடம் பிடிக்க வேண்டும் என்ற கனவுடன் இருக்கும் சீனாவிற்கு கொரோனோ நச்சுக்கிருமிகளால் ஒரு புதிய சவால் விடப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் சீனாவில் ஜனவரி 24 முதல் 30 வரையான ஏழு நாட்களில் பெரும்பாலானோர் புத்தாண்டு விடுமுறையில் இருப்பதால் பொருளாதார நடவடிக்கைகள் அந்த ஒரு வாரமும் மந்த நிலையிலேயே இருக்கும். ஜனவரி 30ஐயும் தாண்டி கொரோனோ நச்சுக்கிருமிகளின் தாக்கம் இருக்குமென்றால் சீனாவின் பொருளாதாரத்தில் சிறு பாதிப்பு ஏற்படலாம். சீனாவில் இருந்து செய்யப்படும் ஏற்றுமதிகளுக்கு பாதிப்பு ஏற்படலாம். கொரோனோ நச்சுக்கிருமிகள் கடலுணவில் இருந்தே ஆரம்பித்தன எனக் கருதப்படுவதால் பல கடலுணவுகள் உட்பட மாமிச உணவுகளுக்கும் சீனாவில் தட்டுப்பாடு ஏற்படலாம். பெரு நகரங்களுக்கு மக்கள் பயணிப்பதைத் தவிர்க்கும் போதும் வெளிநாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான பயணம் தடை செய்யப்படும் போது அல்லது தவிர்க்கப்படும் போதும் பொருளாதாரம் பாதிக்கப்படும். சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் குறைந்தால் எரிபொருள் விலை குறையலாம். உலகப் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற நிலை தோன்றினால் தங்கத்தின் விலை உயர்வதுடன் அமெரிக்க டொலர், ஜப்பானின் யென் ஆகியவை பெறுமதி அதிகரிப்படையலாம்.

### முகமூடியணிந்த சீனா

சீனா முழுவதும் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள பல மில்லியன் கண்காணிப்பு ஒளிப்பதிவுக் கருவிகள் முகங்களை வைத்து ஆட்களை அடையாளம் காணக் கூடியவை. தெருக்களை கண்டபடி கடப்பவர்களைக் கூட இந்த ஒளிப்பதிவுக்கருவிகள் மூலம் இனம் கண்டு அவர்கள் தண்டிக்கப்படுவதுண்டு. பல பெரிய குற்றச்செயல்களை முகங்களை இனம் காணும் தொழில்நுட்பத்தின் மூலம் சீனா தடுத்து வருகின்றது. ஹொங் ஆர்ப்பாட்டங்காரர்கள் இதைத் தவிர்க்க முகத்தைப் பாதி மூடியபடி ஆர்ப்பாட்டம் செய்ததால் அங்கு முகமூடி அணிவதைத் தடை செய்யும் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று கொரோனோ நச்சுக்கிருமிகளால் தாக்கப்படுவதைத் தடுக்க எல்லோரும் முகமூடி அணிய வேண்டிய நிலை சீனாவில் ஏற்பட்டுள்ளது.

2003-ம் ஆண்டு சார்ஸ் நச்சுக்கிருமிகளை சீனா சாதுரியமாகக் கையாண்டது. 2002இலும் 2003இலும் உலகெங்கும் 750இற்கு மேற்பட்டோர் சார்ஸ் நச்சுக்கிருமிகளால் கொல்லப்பட்டனர். ஆனால் சீனாவின் துரித பொருளாதார வளர்ச்சியால் 2002இலும் பார்க்க அதிக அளவு மக்கள் அதிக துரிதமாக நகரங்களுக்கிடையில் பயணிக்கின்றார்கள். 2002இல் சீனா சார்ஸ் பற்றிய செய்திகளை அடக்கி வாசிக்க விரும்பியது. ஆனால் இன்று அது போல் இல்லாமல் உரிய தகவற்பரிமாற்றங்கள் செய்யப்படுவதால் மக்கள் அதிக அளவில் முன்னெச்சரிக்கையுடன் நடக்கின்றனர். கொரோனோ நச்சுக் கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை சீனா குறைத்து வெளியிடுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. சீனாவைச் சுற்றியுள்ள மியன்மார், பங்களாதேசம், நேப்பாளம் போன்ற நாடுகளில் கொரோனோ நச்சுக்கிருமிகளைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு சீனா கைகொடுக்க வேண்டும். ●

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org






**எமது ஆலயத்தில் பின்வரும் பணிகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் மேல் குறிப்பிட்ட மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.**

## மகோற்சவ குரு

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தைத் திறம்பட நடாத்த மகோற்சவ குரு பதவி. ஒரு மாதத்துக்கு மட்டும் இப்பதவி நீடிக்கும். குருக்கள் பட்டம் பெற்றவராகவும், தாயகத்தில் கொடியேற்றங்களை நடாத்திய முன் அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். தகுந்த வேதனம் வழங்கப்படும். **விண்ணப்ப முடிவு திகதி: 15.02.2020**

## மகோற்சவ இசை - தவில் நாதஸ்வரவித்துவான்கள்

இந்த வருட (2020) ஆலய மகோற்சவ கால மங்கள இசை தவில் நாதஸ்வர வித்துவான்கள் வெற்றிடம். ஒரு மாதத்துக்கு மட்டும். தருதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம். **விண்ணப்ப முடிவு திகதி: 15.02.2020**

## மூன்று ஆலய சிவாச்சாரியார்கள் பதவிகள்

### தகைமைகள்

விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.
சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவம் தேவை

### ஓர் உதவி சிவாச்சாரியார் பதவி

சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவத்துடன், சுவாமி நெய்வேத்தியம், பூமாலை கட்டுதல், அலங்காரம் செய்தல் என்பனவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### வேதனம்

பிரித்தானிய அரச விதிகளுக்கு அமைய வேதனம் வழங்கப்படும்.
அடியார்கள் தட்சணை பகிர்ந்து வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.02.2020

### பின் வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கவும்

A) ஆலய அலுவலக உதவியாளர்கள்
(OFFICE ADMINISTRATORS)
FULL TIME AND PART TIME

B) பகுதி நேர கணனி வேலையாளர்
PART TIME TYPIST WITH I/T KNOWLEDGE

**விண்ணப்ப முடிவு திகதி: 15.02.2020**

**PLEASE DONATE FOR PRAYER HALL**
**தியான மண்டபம்**
விரைவில் அமையவுள்ள தியான மண்டபத்துக்கான வேலைகள் யாவும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.
நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்!
இது பற்றிய காணிக்கைகளுக்கு ஆலயத்துடன் தொடர் கொள்ளவும்.

**மேற்படி பதவிகளுக்குத் தகுதியானோர் மட்டும் விண்ணப்பிக்கலாம். இப்பதவிகள் தொடர்பான தகைமைகள், வேதனம் என்பன பற்றிய விபரங்களுக்கு தலைவர் / செயலாளர் ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.**